Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-

# திருமறை ஆசான்

## புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர்-19 இதழ்-7 ஜூலை - 2006



கிறிஸ்துவின் சபை
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
✆ 04257 - 230030 Cell : 98427 - 30382 , 98428 - 30382
E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

## உங்கள் கவனத்திற்கு ...

கடந்த 1994 ஆம் ஆண்டு துவங்கி,
காங்கயத்தில் நடைபெற்று வரும்
**"எக்லீசியா வேதாகமக் கல்லூரி"** யின்
**மூன்று வருட பட்டப்படிப்பிற்கு**
தகுதியுள்ள மணமான, மணமாகாத ஆண்கள்
மற்றும் / வாலிபரிடமிருந்து விண்ணப்பங்கள்
உடனடியாக வரவேற்கப்படுகின்றன.

★ விவரம் 9ம் பக்கம் பார்க்கவும் ★

## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ............ 1
2. நிச்சயமாய் நடக்கக் கூடியவை ............ 9
3. பெண்கள் பகுதி ............ 13
4. வாலிபர் பகுதி ............ 17
5. சிறுவர் பகுதி ............ 21
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ............ 23
7. தங்கள் வயிற்றுக்கே ஊழியம் செய்கிறார்கள் ............ 27
8. வேதாகம திருமுழுக்கு ............ 32

# THIRUMARAI AASAAN

S. Rajanayayagam
Editor

J.C. Choate
Honorary Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 19 JULY . 2006 Issue - 7**

ஆசிரியர் உரை

## "வழக்காடுவோம் வாருங்கள்"

பழைய ஏற்பாட்டிலுள்ள அனைத்து புத்தகங்களிலும் விசேஷமானதென்றும், வித்தியாசமானதென்றும் சொல்லப்படும் தகுதி ஏசாயா தீர்க்க தரிசன நூலுக்கு உண்டு. இச்சிறப்பு நிலைக்குப் பல ஆதாரங்களை நாம் அடுக்க முடியும். இதை சிலர் "குட்டி வேதாகமம்" என்று அழைப்பர். இப்படிச் சொல்வதற்குக் காரணம் இல்லாமலில்லை. ஒட்டுமொத்த வேதாகமத்தில் மொத்தம் 66 புத்தகங்கள் உள்ளது போலவே இதிலும் 66 அதிகாரங்கள் இருக்கிறது. முழு வோதகமம் எப்படி அதன் செய்தியினடிப்படையில் 39 நூல்கள், 27 நூல்கள் என்று பிரிக்கப்பட்டிருக்கிறதோ அது போலவே இந்நூலையும் செய்தியினடிப்படையில் 39 அதிகாரங்கள் 27 அதிகாரங்கள் என்று பிரிக்க முடியும்.

ஒன்றிரண்டு புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களைத் தவிர மற்ற அனைவராலும் மேற்கோள் காட்டப்பட்டிருக்கும் தீர்க்கதரிசன நூல் இது தான். எஞ்சியிருக்கிற அனைத்து தீர்க்கதரிசன நூல்களின் மேற்கோள்களை ஒன்று சேர்த்தால் கூட இந்த ஒரு புத்தகத்தின் அளவுக்கு வருவதில்லை.

சிறப்பான இச்சிறப்புகளையெல்லாம் ஓரம் கட்டும் வேறொரு சிறப்பும் இந்தப் பழைய ஏற்பாட்டு நூலுக்கு உண்டு. கிறிஸ்துவின் முதலாவது வருகை பற்றியும், சபையாகிய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்பது பற்றியும் இதில் நேர்த்தியாக விவரிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவைப் பற்றி இதன் ஆசிரியர் பேசுவதைக் கவனித்தால், இவர் ஒரு புதிய ஏற்பாட்டு

எழுத்தாளரோ என்று கூட எண்ணத் தோன்றும். இவர் கிறிஸ்துவைக் கண்ட விதத்தை, பின்னாளில் அப்போஸ்தலன் யோவான் இவ்விதம் கூறுகிறார். **"ஏசாயா அவருடைய மகிமையைக் கண்டு, அவரைக் குறித்துப் பேசுகிற போது இவைகளை சொன்னான்"** என்று. (யோவா. 12:41). அதாவது கிறிஸ்துவின் பிறப்புக்குப் பிறகு வாழ்ந்த, வாழ்கின்ற எண்ணிலடங்காதோர் அவருடைய மகிமையைக் காணமுடியாமல் தடுமாறும்போது, அவருடைய பிறப்புக்குப் பல ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஏசாயா கண்டு கொண்டதாகக் கூறுகிறார்.

இத்தீர்க்கதரிசன நூலின் ஆசிரியரான ஏசாயா மெத்தப்படித்தவர் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஏனெனில், மற்ற தீர்க்கதரிசிகளின் எழுத்துக்கும் இவருடைய எழுத்துக்கும் குறிப்பிடத்தக்க வேறுபாடு உண்டு. சொல்நயமும், கருத்துச்செறிவும் இதில் ஒருங்கே அமைந்திருப்பதை நாம் காண முடியும். வேத விற்பன்னர்கள் இவரை பழைய ஏற்பாட்டின் பவுல் என்றும் சொல்வதுண்டு.

இந்த ஏசாயா தெற்கு இராஜ்ஜியமாகிய யூதாவிலே தீர்க்கதரிசனம் உரைத்த ஒரு மகா தீர்க்கன். இச்சீரிய பணியை சுமார் 60 ஆண்டுகள் செவ்வனே செய்தான். இவனுடைய நாட்களில் இராஜாக்களாக உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா ஆகியோர் இருந்தனர். இவனுக்குப் பின் வந்த எரேமியா தனது பணியில் தோற்றுப் போகும் போது, இவர் அசீரியரிடமிருந்து எருசலேமைக் காப்பாற்றும் பணியில் வெற்றி கண்டார்.

இவருடைய ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் ஜனங்களுடைய ஆன்மீக நிலை படுமோசமாக இருந்ததென்று சொல்வதை விட, மிகக் கேவலமாக இருந்ததென்று சொல்வதே நியாயம். இவர்களைப் பற்றிய மனக் குமுறலை தேவன் ஏசாயாவைக் கொண்டு கொட்டினார். முதலாவது, இவர்கள் தேவனுக்கு விரோதமான கலகமுள்ள ஜனமென்று பெயரிடப் பட்டுள்ளனர். (வ.2) அடுத்து, அறிவும், உணர்வும் அற்ற நன்றி கெட்ட ஜென்மங்கள் என்று இடித்துரைக்கப்பட்டுள்ளனர். (வ.4).. பிறகு பாவமும், அக்கிரமமும், பொல்லாப்பும், கேடும் நிறைந்த ஜனங்கள் என்று அலங்கரிக்கப்பட்டுள்ளனர் (வ.4). இன்னும் ஆன்மீக ரீதியில் வியாதிப்பட்டு, மரண அவஸ்தையுடன், முற்றிலும் நாற்றமெடுத்த நிலையில் உள்ள தாகவும் சித்தரிக்கப்பட்டிருக்கிறார்கள் (வ.5,6).

ஒன்றாம் அதிகாரத்தைத் தொடர்ந்து நாம் வாசித்தால், ஜனங்களின் அடாவடித்தனமான கீழ்ப்படியாமையைப் பொறுக்கமுடியாத தேவன் ஒரு கட்டத்தில், **"போதும், இனி நிறுத்துங்கள்"** என்று கடுமையாக எச்சரிக்க வேண்டியதாயிற்று. பலிகள் என்னத்துக்கு நிறுத்து; கொழுத்த மிருகங்களின் நிணம் தேவையில்லை, நிறுத்து; ஆட்டுக்கடாக்களின் இரத்தத்தில் பிரியமில்லை, நிறுத்து; காணிக்கை வேண்டாம், நிறுத்து; தூபங்காட்டுதல்

அருவருப்பாயிருக்கிறது, நிறுத்து; உன் மாதப்பிறப்பும், ஓய்வு நாளும், சபைக் கூட்டமும் அக்கிரமமாயிருக்கிறது. இனி சகிக்கமாட்டேன். ஆகவே, நிறுத்து; பண்டிகைகளைச் சுமந்து இளைத்துப்போனேன், நிறுத்து என்று வரிசையாகச் சொல்லி வந்தவர், இறுதியாக, அவர்களைப் பற்றிய தன்னுடைய அதிருப்தியின் உச்சகட்டமாக, உன் ஜெபத்தையும் நிறுத்து என்று சொல்லிவிட்டார். (11-15).

இப்படிப்பட்ட ஒரு அவலச் சூழ்நிலையில் தான், பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்ட ஏசாயா தீர்க்கன், தன்னுடைய வசனத்தின் மூலமாக நம்பிக்கையின் வாசலைத் திறந்து காட்டுகிறார். இப்பொழுதும் ஒன்றும் முழுகிப்போகவில்லை, மனந்திரும்புங்கள் என்று அவர்களை ஊக்கு விக்கிறார், நன்மையைப் பெற்றுக்கொள்ள வாருங்கள் என்று அழைக்கிறார். இதோ, அந்த வசனம் **"வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல் கிறார். உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப் போல வெண்மையாகும், அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் போலாகும்"** (ஏசாயா 1:18).

அற்புதமான இந்த வசனத்தின் முதல் இரண்டு வார்த்தைகள் தான் நமது ஆராய்ச்சிக்கான பகுதி. ஆம், **வழக்காடுவோம் வாருங்கள்** என்பது.

முதலாவது, **"வழக்காடுவோம்"** என்பது பற்றிப்பார்ப்போம். வழக்கு என்பது நமக்குப் பரிச்சயமான ஒரு வார்த்தை தான். தரத்திற்கும், தகுதிக்கும் ஏற்ற வழக்குகளை நாம் நமது வாழ்க்கையில் சந்தித்துக் கொண்டு தான் உள்ளோம். நீதிமன்றத்திற்கு சென்று வாதாடினால் தான் அது வழக்காகும் என்பதல்ல. இருவருக்கும் இடையே ஒரு பிரச்சனை இருந்தால் கூட அதுவும் ஒரு வழக்கு தான். இந்த அடிப்படையில் தான், நாம் ஏசாயாவின் வார்த்தைகளை அணுக வேண்டும்.

சரி, இங்கே நடந்த வழக்கு ஜனங்களுக்கும், கர்த்தருக்கும் இடையே நடந்த ஒன்று. எது சரி என்று தீர்மானிப்பது தான் வழக்காடுதலின் நோக்கமாகும். அதாவது, விவாதித்து, ஒரு முடிவுக்கு வந்து, நீதியை நிலைநாட்டுவது. இக்கருத்தின்படி, தேவன் சரியா அல்லது மனிதன் சரியா என்று வாதிட்டு பிறகு ஒரு முடிவுக்கு வர வேண்டுமென்பது இந்த வசனத்தின் நோக்கமல்ல. ஏனெனில், தேவன் எப்பொழுதுமே நீதிபரரே. அவர் எந்தச் சூழ்நிலையிலும் தனது பரிசுத்தம் மற்றும் நீதியிலிருந்து ஒருபோதும் மாறுவதில்லை. அப்படியானால் இதன் பொருள் என்ன? நீதியின் பாதையில் நடவாமல், தடம்புரண்டு நியாயத்தைக் காலின் கீழே போட்டு மிதித்துக் கொண்டிருக்கும் ஜனங்களுக்கு நியாயத்தைக் கற்றுக் கொடுக்கும் வழக்காகவே, இவ்வழக்கு இடம் பெற்றுள்ளது. அதாவது, நீதியைத் தெரிந்து கொள்ள நீதியுள்ள தேவன் சொல்வதைக் கேளுங்கள் என்பதே இவ்வழக்கின் ஒரே நோக்கம்.

தேவனுடைய வார்த்தைகளை புறக்கணித்ததே பிரச்சினைகளுக்குக் காரணம். ஆகவே, தேவன் நமக்குச் சொல்வதைக் கேளுங்கள், அதினால் நன்மை உண்டு என்று இவ்வழக்கின் மூலம் உணர்த்தப்படுகிறார்கள். ஏனெனில், தேவனுடைய வார்த்தைகள் புரிந்து கொள்ளக்கூடியதாகவே உள்ளது. இந்த வழக்குக்கு வாருங்கள், வந்து தேவன் சொல்வதைக் கேளுங்கள். அப்பொழுது உங்களுக்கு விடுதலை கிடைக்கும் என்று கூறுகிறார். அப்போஸ்தலன் யோவானும் புதிய ஏற்பாட்டில் இக்கூற்றை ஆமோதிக்கிறார். "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்று (யோவா. 8:32).

அடுத்த வார்த்தை, வாருங்கள் என்னும் அழைப்பு. அதாவது நீதியையும், நியாயத்தையும் அறியும் அறிவைப் பெற்றுக்கொள்ள வாருங்கள் என்பது. ஆங்கில வேதாகமம், "இப்பொழுதே வாருங்கள்" என்ற பொருளில் கூறுகிறது. அதாவது, அழைப்பு மிக அவசரமாக உள்ளது. அழைப்பை ஏற்றுக் கொள்ளத் தாமதிக்கத் தாமதிக்க ஆபத்து அதிகம் என்பதே இந்த அவசர அழைப்பின் பொருள். தேவனை அறியும் அறிவு - வேத வசனத்தைப் பற்றிய அறிவு இல்லாவிட்டால் ஆபத்து அதிகம் என்பதில் சந்தேகமில்லை. ஞானி சாலமோன் தேவ ஏவுதலினால் இதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லியுள்ளார். "தீர்க்கதரிசனம் இல்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள்" (நீதி. 29:18) என்று.

ஏசாயாவின் நாட்களில் ஜனங்களை எதிர்நோக்கியிருந்த ஆபத்து பெரும்பாலும் சரீர அழிவு சம்பந்தப்பட்டது. அதற்கே அவர்கள் செயல்படும்படி அவசரப்படுத்தப்பட்டுள்ளார்கள். ஆனால், இப்பொழுது நம்மை எதிர்நோக்கியிருக்கும் ஆபத்து ஆன்ம அழிவு சம்பந்தப்பட்டதென்பதைக் கவனியுங்கள். நித்திய நரகத்திலே நம்மைத் தள்ளுமளவிற்கு ஆபத்துடையது. ஆகவே, நாம் அதைவிட அவசரமாக செயல்பட வேண்டிய அவசியமுள்ளது.

இன்றைய மத உலகத்தை நாம் உற்று நோக்கினால், ஆன்மீகச் சீரழிவில் திரும்பி வர முடியாத எல்லையை அது தொட்டு விட்டதோ என்று ஐயப்படுமளவுக்கு நிலைமை மோசமாக உள்ளது. கள்ளத் தீர்க்கதரிசனங்களிலும், கள்ள உபதேசங்களிலும் ஜனங்கள் வெகுவாகப் பிரியப்படுகிற நிலையை நாம் கவனிக்கும் போது, ஏதோ நாம் எரேமியா தீர்க்கனுடைய நாட்களில் இருக்கிறோமோ என்றுகூட எண்ணத் தோன்றுகிறது. அந்நாட்களில் ஜனங்கள் மார்க்க மோசடியில் திளைத்து சுகித்திருந்ததைக் கண்ணுற்ற தேவன், திகைத்துத் திடுக்கிட்டதாக வேதம் கூறுகிறது. "திகைத்து திடுக்கிடத்தக்க காரியம் தேசத்திலே நடந்து வருகிறது. தீர்க்கதரிசிகள் கள்ளத் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்; ஆசாரியர்கள் அவர்கள் மூலமாய் ஆளுகிறார்கள்.

இப்படியிருப்பது என் ஜனத்துக்குப் பிரியமாயிருக்கிறது. ஆனாலும், முடிவிலே என்ன செய்வீர்கள்? (எரே. 5:30,31).

**"முடிவிலே என்ன செய்வீர்கள்?"** என்ற கேள்வி இந்நாட்களில் வாழும் நமக்கு மிகப் பொருத்தமாக உள்ளது. மத மோசடிக் கும்பல்களிடமிருந்து நம்மை விடுவித்துக் கொள்ளும் முயற்சியை நாம் மிக அவசரமாக செயல்படுத்தாவிட்டால், முடிவிலே நாம் என்ன செய்யப் போகிறோம்? சொல்லுங்கள்.

இங்கே, தேவனுடைய கேள்வியை நன்றாக கவனியுங்கள். "முடிவிலே என்ன செய்வீர்கள்?" அநேகராகிய நாம், ஆன்மீக வாழ்வில் நம்முடைய காரியங்கள் சரியா, தவறா என்று தீர்மானிப்பதற்கு நமது இன்றைய வாழ்க்கை நிலையைக் கணக்கிலெடுத்துக் கொள்கிறோம். அதாவது, இவ்வுலகில் நமக்கிருக்கும் வீடு, வாசல், சொத்து, சுகம், பட்டம், பதவி, அந்தஸ்து போன்றவற்றை கணக்கிட்டு ஆன்மீகத்தில் நான் செய்வ தெல்லாம் சரியாக இருக்கிறபடியால் தான் இவைகளெல்லாம் ஆசீர்வாதமாக எனக்கு கிடைக்கிறது. ஆகவே, நான் செய்வதைத் தொடர்ந்து செய்யலாம், எதைப் பற்றியும் சிந்திக்கத் தேவையில்லை; வேறு எதற்கும் கீழ்ப்படியத் தேவையில்லை, எதையும் மறுபரிசீலனை செய்யத் தேவையில்லையென்று எண்ணுகிறோம். **ஏசாயா மற்றும் எரேமியா தீர்க்கன்களின் நாட்களிலும் இதே எண்ண ஓட்டம்தான் இருந்தது.** ஆனால், தேவனுடைய கேள்வியை நன்றாகக் கவனியுங்கள். **"முடிவிலே, என்ன செய்யப்போகிறீர்கள்?"** நமக்கு முடிவு என்பது நியாயத்தீர்ப்பின் நாள். அந்த நியாயத் தீர்ப்பின் நாளில் என்ன செய்யப் போகிறீர்கள்? சொல்லுங்கள்.

அப்போஸ்தலன் பவுல் அத்தேனருக்குப் பிரசங்கிக்கும் பொழுது இந்த நியாயத்தீர்ப்பின் நாளைக் குறித்து எச்சரித்துள்ளதையும் கவனியுங்கள். **மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப் பண்ணினார் என்றான்.** (அப். 17:31). அந்த நியாயத்தீர்ப்பின் நாளிலே நாம் தப்பித்துக் கொள்ளும்படியாக நாம் தேவனுடைய வார்த்தைகளோடு வழக்காட வேண்டும். அவருடைய வார்த்தைகளுக்கு மாத்திரமே நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். ஏனெனில், நம்மை நியாயந் தீர்க்கப்போவது தேவ வார்த்தைகளே. இயேசு ஆண்டவர் இதுபற்றி தெளிவாகச் சொல்லிவிட்டார். **என்னைத் தள்ளி என் வார்த்தை களை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்.** (யோவா. 12:48) தேவனுடைய வார்த்தைகளோடு நாம் ஏன் வழக்காடவேண்டு மென்பது இப்பொழுதாவது புரிகிறதா?.

அன்பரே! தேவனுடைய வார்த்தைகளோடு வழக்காடி, நியாயத்தைக் கற்றுக்கொள்ள, நீதியைப் பிடித்துக் கொள்ள, உண்மையான சத்தியத்தை அறிந்துகொள்ள, உண்மையான சபையை அடையாளம் கண்டு கொள்ள. இரட்சிப்பின் திட்டத்தை ஏற்றுக்கொள்ள பிடிவாதமாக மறுக்கும் நாம், **முடிவிலே என்ன செய்யப்போகிறோம்?** ஏதாவது அதிரடித் திட்டம் கைவசம் உண்டா? மாற்று வழி ஏதாகிலும் கிடைக்குமென நம்புகிறீர்களா? அப்படி எதுவும் இல்லையென்றால் தேவனுடைய வார்த்தையைத் தொடர்ந்து காலின் கீழ்போட்டு மிதிக்கும் நம்முடைய துணிகரமான நிலைக்கு என்ன தான் காரணம் சொல்லுங்களேன்.

அருமையானவர்களே, அந்நாளில் யாரும் நமக்கு சிபாரிசு பண்ண முடியாது முடியாது, நமது பக்திக்குப் பாத்திரமாயிருக்கிற பிரபல பிரசங்கிகளோ, நம்முடைய அபிமானிகளாக உலா வரும் அற்புத ஊழியர் களோ, நம்மால் ஆன்மீகத் தூதர்கள் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் பேராயர்களோ, மனதை மயக்கும் பாடல்களை பாடும் பாதிரிகளோ, இன்னும் இறைவனுக்கு இணையாக மதிக்கப்பெறும், போப்பாண்டவர்களோ நமக்கு சிபாரிசு பண்ண முடியாது. முடியவே முடியாது. ஆன்மீகத்தை உண்மையாக நாடும் மக்கள் இவர்களின் விஷயத்தில் மிகவும் கவனமாக இருப்பது அவசியம். இப்படிப்பட்டவர்களைக் குறித்து தீமோத்தேயு சொல்வதைக் கவனியுங்கள். **தாங்கள் சொல்லுகிறது இன்னதென்றும், தாங்கள் சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதிருந்தும், நியாயப்பிரமாண போதக ராயிருக்க விரும்புகிறார்கள்.** (1தீமோத். 1:7) என்று.

இப்படிப்பட்ட கள்ளத்தீர்க்கதரிசிகளைக் குறித்துப் பேதுரு அப்போஸ் தலன் இன்னும் ஒருபடி மேலே சென்று கடுமையாக குறிப்பிடுவதைப் பாருங்கள். **தாங்களே கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும், மற்றவர்களுக்கு சுயாதீனத்தை வாக்குத்தத்தம் பண்ணுகிறார்கள்...** என்று (2பேது. 2:19).

எனக்கு அருமையான வாசகரே! உங்கள் விசுவாசத்தை எதன்மீது கட்டியிருக்கிறீர்கள்? பெரும்பான்மையை ஆதாரமாக வைத்தா அல்லது வேத வசனங்களை அடிப்படையாகக் கொண்டா? நீங்கள் பாவ மன்னிப்பு பெற்றது உணர்வுகளினடிப்படையிலா அல்லது வேத வசனங்களின் சட்டப்படியா? நீங்கள் சார்ந்திருப்பது மனிதனால் ஆரம்பிக்கப்பட்ட பிரிவினை சபையா அல்லது வேத வசனங்களில் சொல்லப்பட்டிருக்கும் கிறிஸ்துவின் சபையா? உங்கள் ஆராதனை முறை மனிதனால் வகுக்கப்பட்ட கொள்கைப் புத்தகத்தின் படியானதா அல்லது வசன மாதிரியின் ஆவியும், உண்மையும் உடையதா? இன்னும் நீங்கள் பாட்டு பாடுவதும், கர்த்தருக்கு காணிக்கை கொடுப்பதும், கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுவதும் எந்த அடிப்படையில் நடக்கிறது? ஒவ்வொன்றுக்கும் வசன ஆதாரம் இருக்கிறதா என்று கவனிக்கிறீர்களா?.

இதெல்லாம் அவ்வளவு முக்கியமில்லையென்று நீங்கள் சொன்னாலோ அல்லது இதற்கெல்லாம் எனக்கு நேரமில்லையென்று நீங்கள் சொன்னாலோ, **முடிவிலே என்ன செய்யப்போகிறீர்கள்?** சிந்தியுங்கள், சிந்தியுங்கள். சிந்திக்க வாய்ப்பு நம்முடைய மரணம் வரைதான் அல்லது இயேசுக் கிறிஸ்து வரும் வரையில் தான், பிறகு ஒன்றுமே செய்யமுடியாது. லாசரு, ஐசுவரியவான் உவமையை இயேசு இந்த உண்மையை விளக்கும் படியாகவே சொன்னார். ஆகவே, மிகுந்த எச்சரிக்கையோடு ஆன்மீக வாழ்வில் அடியெடுத்து வைக்க வேண்டும்.

நண்பரே! **வழக்காடுவோம் வாருங்கள்** என்ற தலைப்பை நான் தெரிந்து கொண்டது உங்களை வம்புக்கு இழுக்க அல்ல. அன்றைக்கு இந்த அழைப்பை கொடுத்த தேவன். அவர் சொல்வதைக் கேட்டு, நீதியில் நடக்க மனிதனை அழைத்தார். அன்றைக்கு தேவன் சொல்வதை ஜனங்களுக்குச் சொல்ல ஏசாயா தீர்க்கன் இருந்தான். அவன் சொல்படி கேட்டால்போதும். ஆனால், இன்றைக்கு **வல்லமை நிறைந்த வேத வாக்கியங்கள் பூரணமான நிலையில் நமக்காக எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது**. அந்த வார்த்தைகளோடு நாம் வழக்காட கடமைப்பட்டுள்ளோம். நாம் நம்மை சத்தியத்தில் நிலை நிறுத்திக் கொள்ள இந்த வழக்காடுதல் அவசியம்.

ஆகவே, கலப்படமற்ற சுத்த சுவிசேஷத்தை நாம் அறிந்து கொள்ளவும், ஆத்தும இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளவும், இயேசுக் கிறிஸ்து தமது சொந்த இரத்தத்தைச் சிந்தி சம்பாதித்த ஒரே சபையாகிய கிறிஸ்துவின் சபையில் சேர்க்கப்படவும், நீதியான வாழ்க்கை வாழவும், இந்த வழக்காடுதல் அவசியம். நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ள இந்த வழக்காடுதல் மிகமிக அவசியம். ஆகவே, நாம் ஒவ்வொருவரும் ஜீவனும், வல்லமையுள்ள தேவனுடைய வார்த்தைகளோடு வழக்காடி, அதாவது, வசனங்களின் உபதேசத்துக்கு மாத்திரம் நம்மை முற்றிலுமாக ஒப்புக்கொடுத்து பரிசுத்த ஜீவியம் ஜீவித்து, பரிசுத்த நகரத்துக்குள் பிரவேசிப்போம்!.

தேவனுடைய கிருபையும், இரக்கமும், சமாதானமும் உங்களோடி ருப்பதாக! ஆமென்!.

**S. ராஜநாயகம்**

# எக்லீசியா வேதாகமக் கல்லூரி

மாணவர் சேர்க்கை அறிவிப்பு

# EKKLESIA BIBLE COLLEGE

P.O. Box-27, KANGAYAM - 638 701. India.

**STUDENTS ADMISSION NOTIFICATION**

புதிய ஏற்பாட்டு உபதேசத்தில் முழு நம்பிக்கையும், கிறிஸ்துவின் நற்செய்தியை நானிலம் எங்கும் எடுத்துச் சொல்லவேண்டுமென்பதில் இணையில்லா ஈடுபாடும் கொண்ட **வாலிபர்களிடமிருந்து** விண்ணப்பங்கள் உடனடியாக வரவேற்கப்படுகின்றன. **திருமணமாகி 35 வயதைத் தாண்டாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.**

**காலம்** : **3 வருடம்** (செமஸ்டர் முறை)

**Duration** : **3 Years** (Semester System)

**கல்வித்தகுதி** : **+2 தேர்ச்சி** (அல்லது) **பட்டப்படிப்பு**

**Qualification : +2 Pass (or) Any Degree**

**பட்டம்** : **வேதயியலில் இளங்கலை பட்டம்**

**Degree** : **B.B.S.** (Bachelor of Biblical Studies)

**தகுதியுள்ளவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும்**

விபரங்கட்கும், விண்ணப்பங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

## இயக்குநர்

எக்லீசியா வேதாகமக் கல்லூரி

தாராபும் ரோடு, காங்கயம் - 638 701. இந்தியா

✆ 04257 - 230030, 230603 செல் : 98427 - 30382

# நிச்சயமாய் நடக்கக் கூடியவை

நாம் மிகவும் பயங்கரமான கால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற பய உணர்வு மக்களை ஆட்கொண்டிருக்கிறது. இன்றைக்கு நாம் சில காரியங்களைச் செய்ய வாய்ப்பு இருக்கலாம்; இதே நிலை நாளைக்கும் நீடிக்கும் என்று சொல்ல முடியாது. இதே சூழ்நிலை நமக்கு கவலையையும், நம்பிக்கையின்மையையும் சோர்வையும் உண்டாக்குகின்றன.

பரிசுத்த வேதாகமம் கூட, நாளைக்கு என்ன நடக்கும் என்று அறியமாட்டோமே என்று கூறி நம்முடைய அறிவுக்கு எல்லை வகுத்திருக் கிறது. (யாக். 4,13,14) ஆகவே இன்றைக்கு இருந்து நாளைக்கு மறைந்து போகும் அநித்தியமான உலகப் பொருட்களை நம்பி நாம் பெருமிதப்பட்டுக் கொள்ள முடியாது. (மத். 6:19-21) வாழ்க்கை என்பது இப்படிப்பட்ட நிச்சயமற்ற காரியங்கள் மட்டும் நிறைந்ததா? நாம் நம்பிக்கை வைத்து நிம்மதியாக இருக்கக் கூடிய எதுவுமே இல்லையா? என்று திகைக்காதீர். சில மாறாத நிச்சயங்களும் உண்டு. இதோ! அவைகளில் சில முதலாவது நாம் **"உலகத்தில் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை இங்கிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை"** என்று தேவனுடைய ஆவியைக் கொண்டு பவுல் அப்போஸ்தலன் பொருள் பொதிந்த இந்த வார்த்தைகளைக் கூறி விட்டு தொடர்ந்து அவர், **"உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்"**.

**ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும், அழிவிலும், அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளில் விழுகிறார்கள்.**

**பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள்.**

**நீயோ, தேவனுடைய மனுஷனே இவைகளை விட்டோடி நீதியையும் தேவபக்தியையும், விசுவாசத்தையும், அன்பையும், பொறுமையையும் சாந்த குணத்தையும் அடையும்படி நாடு.**

**விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு; நித்திய ஜீவனைப் பற்றிக் கொள். அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய், அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய்** என்று கூறி

வாழ்க்கையைப் பற்றி சில தெளிந்த கருத்துக்களை எடுத்து வைக்கிறார். (1தீமோ. 6:7-12).

வாழ்க்கையில் இரண்டு காரியங்கள் நிச்சயம்; ஒன்று அரசாங்கம் விதிக்கும் வரி, மற்றொன்று சாவு என்றார் ஒருவர். அதில் உண்மையில்லை என்று சொல்லிவிட முடியாது. பவுல் அப்போஸ்தலன், மனிதன் உலகக் காரியங்களுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது. யாராக இருந்த போதிலும் நாம் எப்படி வந்தோமோ அப்படியே திரும்பிப் போவோம் என்பதை விளக்குகிறார். அதாவது நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை என்றும், நாம் எப்போதும் நம்முடன் வைத்துக் கொள்ள முடியாத நாம் உலகை விட்டுப் போகும்போது எடுத்துச் செல்லமுடியாத செல்வத்தைத் தேடுவதிலும், சம்பாதிப்பதிலும் இவ்வளவு அக்கறை காட்டுவது மதியீனமான காரியம். அதனால் எப்பொழுதும் நிலைத்திருக்கக் கூடிய நியாயமானதும், நன்மை பயப்பதுமான காரியங்களிலும் நாம் ஈடுபாடு கொள்ள வேண்டும். "**பூமியிலே உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும், துருவும் அவைகளைக் கெடுக்கும். இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இதயமும் இருக்கும்**" என்றார் கிறிஸ்து (மத். 6:19-21).

இரண்டாவதாக : கர்த்தருடைய வாக்குத் தத்தங்கள் மாறாதவைகள். பேதுரு, "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறது போல கர்த்தர் தமது வாக்குத் தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லோரும் மனந்திரும்ப வேண்டும் என்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" என்று கூறுகிறார் (2பேதுரு 3:9) மனிதர் கொடுக்கிற வாக்குறுதிகளை நாம் எந்த அளவுக்கு நம்பலாம் என்பதில் நமக்குக் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், தேவனுடைய வாக்குறுதியைப் பொறுத்த வரையிலும் நாம் நூற்றுக்கு நூறு நம்பிக்கையுடன் இருக்கலாம். "**நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்**" என்கிறார். பவுல் (2 தீமோ 1:12) தேவன் பொய் சொல்லார் என்று அடித்துக் கூறுகிறார் எபிரெய நிருப ஆசிரியர் (எபி. 6:18) பொய்யுரையாத தேவன் ஆதி காலமுதல் நித்திய ஜீவனைக் குறித்து வாக்குத் தத்தம் பண்ணினார் என்கிறார் பவுல் (தீத்து 1:3) கர்த்தர் தாம் நேசிக்கிற மக்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு வாக்குத் தத்தங்களைக் கொடுத்திருக்கிறார். எடுத்துக்காட்டாக, "அவர் எப்போதும் நம்மோடே கூட இருக்கிறார்" (மத். 28:20) "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று அறிந்திருக்கிறோம்." (ரோமர் 8:28) "கிறிஸ்துவுக்குள்

உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தாலும் நம்மை ஆசீர்வதிக்கிறார்" (எபே. 1:3). இவைகளையல்லாமல் வேறு பல வாக்குத்தத்தங்களையும் தேவன் கொடுத்திருக்கிறார். அவைகள் அனைத்தையும் ஏற்ற வேளையில் நிறைவேற்றுவார் என்கிற நிச்சயம் நமக்கு உண்டு. ஏனெனில் கடந்த காலத்தில் அவர் கொடுத்திருந்த அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றியிருக்கிறார்.

மூன்றாவதாக, மரணமும் நியாயத் தீர்ப்பும் நிச்சயமானவைகள், **"அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது"** என்கிறார் எபிரெய நிருப ஆசிரியர் (எபி 9:27) அப்போஸ்தலன் பவுல் குறிப்பிடுவது போல கர்த்தர் மறுபடியும் வரும் போது சிலர் உயிருடன் இருப்பார்கள் என்றும் அவர்கள் மேகங்கள் வழியாய் ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். (1தெச. 4:13-18) இப்போதுள்ள மாமிச சரீரத்தோடு ஒருவனும் பரலோகத்துக்கோ அல்லது நரகத்துக்கோ போகமுடியாது என்பதால் எல்லாரும் ஒன்று மரிக்க வேண்டும் அல்லது மறுரூபமாக்கப்படவேண்டும். அதன் பிறகு நியாயத் தீர்ப்பைச் சந்திக்க வேண்டும். யோபு கூறுவதைப் போல "ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான்" (யோபு. 14:1) யாக்கோபு "மேலும் நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்துக்குப் போய் அங்கே ஒரு வருஷம் தங்கி வியாபாரஞ் செய்து சம்பாத்தியம் பண்ணுவோம் என்பவர்களே, கேளுங்கள், நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே, உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்ச காலம் தோன்றி பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறதே" என்கிறார் (யாக் 4:13-14).

நிச்சயமாக நாம் எல்லாரும் மரிக்கப் போகிறோம். ஆனால், அதற்குப் பிறகு என்ன? நியாயத் தீர்ப்பு நிச்சயம். ஆகையால் நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கிற இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கர்த்தருக்குப் பிரியமான வாழ்க்கை வாழ வேண்டும். நாம் மரணத்தை சந்தித்தே ஆகவேண்டும். அதை தவிர்த்து விடவோ, தள்ளிப்போடவோ, தப்பித்துக் கொண்டு வேறு வழியில் பரலோகத்தை அடைந்து விடவோ முடியாது. நாம் மரிப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவுக்கு நியாயத்தீர்ப்பை சந்திப்பதும் வெகு நிச்சயம். அந்த நியாயத்தீர்ப்பில் நாம் செய்த நன்மைகளுக்கோ அல்லது தீமைகளுக்கோ தக்கதாக நமக்கு நீதி வழங்கப்படுவோம். கிறிஸ்து நம்முடைய நியாயாதிபதியாக இருக்கிறார்(அப். 7:31). அவருடைய வசனங்களின்படி நியாயந் தீர்க்கப்படுவோம். (யோவான் 12:48) மத். 25:46 கூறியுள்ளபடி, பாவம் செய்தவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்கள் நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்.

**நான்காவதாக**, கிறிஸ்து மறுபடியும் வருவார் என்பது மாறாத நிச்சயம். இயேசு எப்படி எடுத்துக் கொள்ளப்பட்டாரோ அப்படியே திரும்பி வருவார் (அப். 1:11) இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதற்கான சாட்சியங்கள் மறுக்க முடியாத அளவுக்குத் தெளிவாக இருந்த போதிலும் அநேகர் அதை நம்புவதில்லை (1கொரி15:1-8) அவர் உயிர்த்தெழுந்திராவிட்டால் மீண்டும் வருவார் என்ற நம்பிக்கை பொருள் அற்றதாயிருக்குமே. அவர் கல்லறையினின்று எழுந்து பரலோகத்திலிருக்கிற பிதாவினிடத்துக்கு போயிருக்கிறார் என்பது உண்மை. ஆகவே மறுபடியும் வருவேன் என்று சொன்ன வாக்குத் தத்தத்தை நிச்சயமாக நிறைவேற்றுவார். ஆயினும் சிலர் பேர், சொல்லி ஆண்டுகள் ஆயிரங்களாய் உருண்டோடி விட்டன. இதுவரை அவர் வரவில்லை. இனிமேல் வருவது என்பது நடக்கிற காரியமாய்த் தோன்றவில்லை என்று வாதிடலாம். பேதுரு வாழ்ந்த நாட்களிலும் அப்படிச் சொன்னவர்கள் உண்டு. அதற்குப் பேதுரு அளித்த பதிலே இன்றைய அவிசுவாசிகளுக்கும் பொருந்தும். **"கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருடம் போலவும், ஆயிரம் வருடம் ஒரு நாள் போலவும் இருக்கிறதென்றே இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டும்"**. (2 பேது 3:8) அதாவது, நாம் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிற வருடம் மாதம் எல்லாம் அவருடைய பார்வையில் அர்த்தமற்றவைகள். சொல்லி இரண்டாயிரம் ஆண்டுகளாகி விட்டனவே என்பதை வைத்துக் கொண்டு அவருடைய வாக்குத்தத்தங்களை சந்தேகிக்க கூடாது. அவர் காலத்தை வென்றவர்.

இயேசு மறுபடியும் எதற்காக வருகிறார்? இது அநேகருடைய கேள்வி. அவர் மீண்டும் வருவதற்குச் சில காரணங்கள் உண்டு.

1. அவருடைய வாக்குறுதியை நிறைவேற்ற
2. எல்லாக் காரியங்களுக்கும் ஒரு முடிவு உண்டாக்க
3. வானத்தையும் பூமியையும் அழித்துப் போட (2பேது 3:10)
4. மரித்துப் போன நல்லவர்களையும், தீயவர்களையும் கல்லறையிலிருந்து உயிரோடு எழுப்ப (யோவான் 5:28,29)
5. மனுக்குலம் அனைத்தையும் நியாயம் தீர்க்க (யோவான் 12:48)
6. தம்முடைய பிள்ளைகள் அடங்கிய இராஜ்ஜியமாகிய சபையை தேவனிடத்தில் ஒப்புக் கொடுக்க (1 கொரி 15:24)

ஆம், நண்பர்களே, கிறிஸ்து மறுபடியும் வருகிறார் என்பது மாறாத நிச்சயம். நீங்கள் அவரை சந்திக்க ஆயத்தமா? நிச்சயமானவைகள் என்று கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள காரியங்களுக்குச் செவி மடுத்து விசுவாசியுங்கள். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவருக்காக வாழ்ந்து அவரைச் சந்திக்க ஆயத்தமாகுங்கள்.

**J.C. சோட்**

பெண்கள் பகுதி

# பெண்கள் போதிப்பது பற்றி

ஒரு கிறிஸ்தவப் பெண் இருபாலரும் கலந்திருக்கும் கூட்டத்தில் போதிக்க முடியுமா? என்பது கேள்வியாயிருந்தால், பதில் "இல்லை" என்பதுதான். 1கொரிந்தியர் 14:34,35 மற்றும் தீமோத்தேயு 2:11-14ல் உள்ள வசனப் பகுதிகள். ஒரு பெண் சபையாகக் கூடிவந்திருக்கும்போது ஆண்கள் மீது அதிகாரம் செலுத்துவதை தடை செய்கிறது. "உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்க வேண்டும்" என்று கூறுகிறது.

ஆனால், போதனை என்பது, பொதுவான ஓர் உரை என்பதிலும் அதிகமான பொருளைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறது. நாம் ஒவ்வொருவரும், நம்முடைய அன்றாட வாழ்க்கையை நடத்தும் போது ஒரு வகையில் "போதிக்கவே" செய்கிறோம்.

❀ நம்முடைய நடத்தையினால் நாம் போதிக்கிறோம், நாம் மற்றவர்களோடு பழகும் விதத்தினால் போதிக்கிறோம். இளம் ஊழியனாகிய தீத்துவுக்குப் பவுல் எழுதும் போது, பெண்கள், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும் "தேவ வசனம் தூஷிக்கப் படாதபடி" நல்நடத்தையுடையவர்களுமாய் இருக்க வேண்டும் என்கிறார். தீமோத்தேயுவிற்கு, அவர் இளம் விதவைகளைக் குறித்து எழுதுகையில், அவளுடைய நடத்தை, நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்காமல் இருக்க வேண்டும் என்கிறார். இந்த புத்திமதியை அவர் எழுதியிருப்பதிலிருந்து, நாம் எல்லோருமே ஒருவகையில் போதிக்கிறோம் என்பது தெளிவாகிறது. நல்ல பாடங்களையோ அல்லது தேவ வசனத்தின் மேலும், அவருடைய ஜனங்கள் மேலும் அவமானத்தையும், நிந்தையையும் கொண்டு வருகிற மோசமான பாடங்களையோ மற்றவர்களுக்கு நாம் வாழ்கிற வாழ்க்கையின் மூலம் கற்றுத் தருகிறோம்.

❀ தங்கள் இல்லத்தின் நான்கு சுவர்களுக்குள் பெண்கள் இடைவிடாது போதிக்கிறார்கள். சில கிறிஸ்தவப் பெண்கள் அவிசுவாசமுள்ள புருஷர்களைத் திருமணம் செய்ததை மனதில் வைத்து, பேதுரு புத்திமதிகளை எழுதுகிறார். அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக்கொள்ளப் படுவார்கள். (1பேதுரு. 3:1-2).

மனைவி கிறிஸ்தவளாகவும், கணவன் அப்படியில்லாத போதும், இரட்சிக்கப்படும்ப்டி அவனுக்கு இருக்கிற ஒரே நம்பிக்கை அவனுடைய மனைவியின் உண்மையான நடத்தை தான். அவள் தன்னுடைய கிறிஸ்தவத்தைக் குறித்து அரைமனதாகவும், அவ்வப்பொழுது சபைக்கு போவதும், அனுதின ஆவிக்குரிய வளர்ச்சியைக் குறித்தோ அல்லது மற்றவர்களுக்குப் போதிப்பதைக் குறித்தோ கவலையற்றவளாயிருந்தால் அப்படிப்பட்டவள் தனது கணவனுக்கு இடறுதலுக்கான கல்லாக மாறும் வாய்ப்பு இல்லாமல் போகாது. அவளுடைய சொந்த நடத்தையே அவள் சுவிசேஷத்தின் உண்மையைக் காணாதபடி குருடாக்கி விடுகிறது. ஆனால், அவள் அன்பாகவும், மரியாதையாகவும், நடந்து தன்னுடைய வாழ்க்கையில், தேவனுக்கே முதல் இடம் என்பதை வலியுறுத்தி வெளிப்படுத்தினால், கணவனும், குடும்பத்தினரும் அவளுடைய நன் நடத்தையிலிருந்து கற்றுக்கொள்வார்கள்.

❀ பிள்ளைகள், வீட்டிலே கற்றுக் கொள்ளும் விசுவாசப்பாடங்கள் பெரும்பாலானவைகளுக்கு, பெண்களே போதகர்களாயிருப்பார்கள். இளம் பிரசங்கியாகிய தீமோத்தேயுவைக் குறித்து நாம் வாசிக்கிறோம். "அந்த மாயமற்ற விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக் குள்ளும், உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது, அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயத்திருக்கிறேன் (II தீமோத் தேயு 1:5) தீமோத்தேயுவின் தந்தை புறஜாதியாக இருந்தார். கிறிஸ்துவின் மேல் விசுவாசத்தைக் கட்டுவதற்கு அடிப்படையாக பழைய ஏற்பாட்டினால் என்பது உண்டாகிற விசுவாசம் அவனுக்குள் இல்லை. தீமோத்தேயு இந்த சத்தியத்தை சிறுபிள்ளை யாயிருக்கும் போதே அவனுடைய பாட்டியும், தாயும் அவனை மடியிலே வைத்து கவனமாய் சொல்லிக் கொடுப்பதைக் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

பெண்கள் வேத வசனங்களைப் போதிக்கும் இந்த உதாரணங்கள். அவர்கள் தங்கள் நடத்தையின் மூலம், சந்தர்ப்பம் வாய்க்கும்பொழுதெல்லாம் போதிக்கும் சுதந்திரமுள்ளவர்களாகவே இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. ஆனால், ஒரு பெண் தன் குடும்பத்தினர் அல்லாதவர்களுக்கு போதிக்கலாமா?.

❀ ஆக்கில்லா என்கிற மனிதனைக் குறித்தும், அவனுடைய மனைவியாகிய பிரிஸ்கில்லாளைக் குறித்தும் அப்போஸ்தலர் 18:2, 25,26-ல் வாசிக்கிறோம். அவர்கள் கொரிந்து பட்டணத்தில் வாழ்ந்தார்கள். அவர்களின் தொழில் கூடாரம் பண்ணுதல். கொரிந்து பட்டணத்திலிருக்கையில் பவுல் இவர்களோடு தங்கினார். ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் ஏற்கனவே கிறிஸ்தவர்களாக இருந்தார்களா அல்லது பவுலால் மனமாற்றடைந்தார்களா என்பதைப் பற்றி வேதாகமம் நமக்கு ஒன்றும் திட்டமாகக் கூறவில்லை. ஆனால்,

பவுல் கொரிந்தை விட்டு புறப்பட்டுப் போகையில், இந்தத் தம்பதிகள், எபேசு மட்டும் அவனோடு சென்றார்கள். அங்கே, யூதனாயிருந்த அப்பொல்லோவைக் கண்டார்கள், அவன் "சாதுரியவானும், வேதாகமங்களில் வல்லவனுமாயிருந்தான்" (வசனம்24), அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக் கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள் (வச. 26).

இந்த வசனத்தின் மொழி நடையை நாம் கவனித்துப் பார்த்தால், ஆக்கில்லாவும், அவன் மனைவியும் சேர்ந்து, ஒரு கூட்டு முயற்சியாகத்தான் அப்பொல்லோவுக்கு போதித்தார்கள் என்பது தெளிவாகிறது. அந்த சம்பவம், ஒரு ஜெப ஆலயத்தில், எல்லோருக்கும் போதிக்கிறோமே அப்படியோ அல்லது சபையாக கூடி வந்திருக்கும் போது, உபதேசிக்கி றோமே அப்படியோ அமைந்திருக்கவில்லை. மாறாக, அவனைத் "தங்களோடு சேர்த்துக் கொண்டு" அவர்கள் அவனுக்கு ஒரு வீட்டுச் சூழலிலே போதித்திருக்க அதிக வாய்ப்புண்டு. வீட்டிலே, வேதாக மத்தைப் பற்றி நாம் படிக்கும் அநேக, சமயங்களில், பெண்களும் பங்கெடுத்துக் கொள்வது நல்லதுதான். அச்சமயங்களில், அவளுடைய மனோநிலையும், நடத்தையும், மற்ற கிறிஸ்தவர்களுக்கு என்ன சொல்லப்படுகிறதோ அதைப் போலவே; சாந்தமாகவும், அன்பாகவும் இருக்க வேண்டுமே தவிர, "எனக்கெல்லாம் தெரியும்" என்பதைப்போல் அமைந்துவிடக்கூடாது.

ஃ அச்சுத் தொழில் வெகு முன்னேற்றம் கண்டிருக்கிற இக்காலத்தில், அநேக விதமான புத்தகங்கள் பழக்கத்திலிருப்பதால், சில வேளைகளில், ஒரு கேள்வி கேட்கப்படுகிறது. அதுஎன்னவென்றால், "ஒரு பெண் எழுதிய ஒரு கட்டுரையையோ அல்லது புத்தகத்தையோ ஒரு ஆண் படித்தால் அது தவறா? என்பது தான் கேள்வி. இதுவும், நாம் ஏற்கனவே படித்தது போல், குடும்பத்தில் வேதத்தைப் பற்றி படிக்கையில் பெண்கள் ஈடுபடுவதைப் போன்றே இருக்கிறது. எப்படியெனில், குடும்ப சூழலில், வார்த்தைகள் வாய் வழியாகப் பேசப்படுகிறது. இங்கு, அச்சிலிருக்கிறது அவ்வளவு தான். பொது இடத்தில் போதிப்பதைப் போன்று, இந்த காரியத்தில் எதுவும் நடப்பதில்லை , புத்தகத்தைப் படிப்பவர் தான் விரும்பினால் அதைப் படிக்கலாம் அல்லது அதை மூடி கீழே வைத்து விடலாம். அவர் எதைத் தெரிவு செய்யவும் அவருக்கு உரிமை உண்டு. அவர் படிக்கும்போது, அருகில் இல்லாத அந்த ஸ்தீரியானவள் தலைமைக் கான எந்த ஒரு அதிகாரத்தையும் (அந்த ஆண்மேல்) செலுத்தவில்லை.

ஃ பெண்கள் பொதுவான இடங்களில் பிரசங்கிக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏதாவது உண்டா? பவுல், தீத்துவுக்கு, முதிர்வயதுள்ள ஸ்திரீகள் பற்றி எழுதும் போது, "பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும்,

தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ள வர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிற வர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும் படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர் களுமாயிருக்கவும்..." (தீத்து 2:3-5) என்று எழுதுகிறார். ஆகவே, தேவன் பவுலைக் கொண்டு பெண்கள் மற்ற பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் போதிக்கலாம் என்று அனுமதி மாத்திரம் தராமல், கட்டளையும் கொடுக்கிறார், இது வீட்டிலோ பொதுவான இடத்திலோ, சிறுவகுப்பிலோ, பெரிய வகுப்புகளிலோ, கருத்தரங்குகளிலோ, ஆண்கள் இல்லாத எந்த இடத்திலும் அப்படிச் செய்யலாம்.

ஃ சிறிய ஒரு கிராமத்திலோ அல்லது வேறு இடத்திலோ பெண்கள் மாத்திரம் இருக்கக்கூடிய சபைகள் இருக்க வாய்ப்புகள் உண்டு. அப்படிப்பட்ட வேளையில் நாம் என்ன செய்யவேண்டும்? தங்களை வழிநடத்துவதற்கு ஆண்கள் இல்லை என்பதால், சபையாக கூடிவருதையே விட்டுவிட வேண்டுமா? இல்லை; அந்த சபையின் அங்கத்தினர்கள் அனைவருமே பெண்களாக இருந்தால் அவர்களே ஆராதனையை நடத்தலாம், எந்த ஒரு ஆணும் அக்கூட்டத்தில் இல்லாதவரை.

ஆகவே, பெண்கள் போதிக்கலாமா என்பது கேள்வியல்ல? ஆனால், அவர்கள் வழிநடத்துகிறவர்களாக, தலைமைப் பொறுப்பை ஏற்கலாமா? என்பதுதான் கேள்வி. ஆண்கள் இருக்கும் கூட்டத்தில் பெண்கள் பிரசங்கிக்கக் கூடாது. கிறிஸ்தவர்களாக கூடிவரும் போது, அதுவும் ஆண்களும் இருக்கும்போது, ஆராதனையின் பங்கை ஒரு ஆண்தான் நடத்த வேண்டும். இது ஆண்களுக்கென்று தேவன் தந்த கடமையாக இருக்கிறது. அதை அவர்கள் பெண்களிடம் கொடுக்கும்போது, அந்த பெண்கள் எவ்வளவு திறமையள்ளவர்களாக இருந்தாலும் கூட இதுதான் நிலைமை இப்படி பொறுப்புகளை பெண்களிடம் கொடுக்கும் ஆண்கள் தேவனுக்கு கீழ்ப்படியாமல் போகிறார்கள் என்பதுதான் உண்மை.

சிறுபிள்ளைகளுக்கும், மற்ற பெண்களுக்கும் அவிசுவாசிகளுக்கும் போதிப்பதே மகத்தானதொரு செயலாகும். அதற்கே அதிக நேரம் செலவாகும். அதைப் பெண்கள் அதிக கவனத்தோடு செய்தாலே, அநேகர் தங்கள் நித்தியத்தை, தேவனோடு கழிக்க முடியும். ஆகவே, பெண்களால் என்ன செய்யக் கூடாதோ அதைப் பற்றிய சர்ச்சையில் ஈடுபடுகிறதும், தர்க்கம் பண்ணுகிறதுமாயிராமல், அவர்களால் என்ன செய்ய முடியுமோ அதில் கவனம் செலுத்துவது மிகவும் நல்லது.

**BETTY CHOATE** — *ரேச்சல் நாயகம்*

வாலிபர் பகுதி

# வாலிபரின் "ஐக்கியம்"

கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பு வாலிப சகோதர சகோதரிகளே! இருளின் பிடியினின்று விடுவிக்கப்பட்டு ஒளியின் ஐக்கியத்தில் கிறிஸ்துவோடும், பிதாவாகிய தேவனோடும் இணைக்கப்பட்டு தேவ சேனைக்குள் யுத்த வீரர்களாய் தெரிந்தெடுக்கப்பட்ட ஜெப வீரர்களே உங்களுக்கு உயிர்த்தெழுந்து சாத்தானை ஜெயித்த மகத்துவமுள்ள இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள் கூறிக்கொள்ளுகிறேன். இந்த மாதம் திருமறை ஆசான் இதழின் வழியாய் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி யடைகிறேன்.

ஐக்கியம் என்ற வார்த்தை "ஒற்றுமை" என்றும் ஒன்றோடு ஒன்று "இணைக்கப்பட்டு" என்றும் பொருள் கொள்ளலாம் ஐக்கியம் என்பது எல்லாதரப்பிலும் இருக்கிறது ஐக்கியம் என்ற வார்த்தை சங்கம் (சங்கமம்) என்றும் அதையே ஆவிக்குரிய வகையில் "சபை" (சர்வசங்கமாகிய சபை) என்றும் அழைக்கப்படும் ஆக கிறிஸ்துவின் சபை என்பது கிறிஸ்துவுக்குள் இரட்சிக்கப்பட்டவர்களின் கிறிஸ்துவுக்குள்ளான ஐக்கியம் என்று பொருள். பிரியமான சகோதரர்களே நம்முடைய ஐக்கியம் எப்படிப்பட்டதாய் இருக்கிறது என்பதை சற்ற ஆராய்ந்து பார்ப்போம்.

## I இருளின் ஐக்கியம் :

ஒளியின் ஐக்கியம் ஒரு போதும் இருளோடு இருப்பது இல்லை. இருளின் ஐக்கியமும் ஒருபோதும் ஒளியோடு இருப்பதில்லை.... இருளின் ஐக்கியம் அது தனி சாம்ராஜ்யம் அது எப்போதும் மாம்சத்தை மகிழ்விக்கின்ற சாம்ராஜ்யம், நம்முடைய மாம்சமும் மனசும் விரும்பினதை செய்ய வைக்கும் ராஜ்யம் பாவத்துக்கு நம்மை அடிமையாக்கும் சாம்ராஜ்யம். இஷ்டம் போல் நடந்து இச்சைகளை நிறைவேற்றிக்கொள்ள வழிசெய்யும் சாம்ராஜ்யம். இன்மையின் நன்மைகளை பெற்று அனுபவிக்கும் இன்மைக்குரிய ராஜ்யம். "இருள்" என்றாலே மனுஷனுக்குள் வருகின்ற முதல் உணர்வு அது பயம்! ஆனால் இருளுக்குள் இருளாய் வாழ்ந்து கொண்டிருப்பவன் பயத்தை மறந்து இருளின் கிரியை செய்ய சரியான சமயம் இருள் சூழ்ந்த நிலை தான் என்று கருதுகிறான்.

மனிதர்கள் அனைவரும் பாவம் செய்து இருளுக்குள் ஐக்கியமானார்கள். இருள் அவர்களை அடிமைகளாக்கிக் கொண்டது. அந்த

இருள் மூன்று வகையிலே செயல்பட வைக்கிறது. (1) கண்களின் இச்சை (2) மாம்சத்தின் இச்சை (3) ஜீவனத்தின் பெருமை ஆகிய வடிவங்களில் மனுஷனுக்குள் கலந்து விடுகிறது. மேலும் வெளிப்படையாக சொல்லுவோமானால் தேவனுடைய அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள உயிரினங்களோடு ஒப்பிட்டு விக்கிரகாராதனை செய்வது, விபச்சாரம், வேசித்தனம், காமவிகாரம், பொருளாசை, கொலை வெறி, வஞ்சகம், அநியாயம், பில்லிசூனியம், களியாட்டு ரோமர் 1:28,29; 1 கொரி 6:9,10; கலா 5:19;20 போன்ற இருளின் கிரியைகளைச் செய்து பிசாசை பிரியப்படுத்தி வாழும் மக்கள் உண்டு. இன்றைய கிறிஸ்தவ இளைஞர்கள் அநேகர் இவைகளில் சிக்குண்டு கிறிஸ்துவின் நாமத்தை தூஷித்துக் கொண்டிருக்கின்றனர். ஆம், பிரியமானவர்களே, சகோதரனை சகோதரன் பகைப்பது இருளின் ஐக்கியத்துக்குள்ளான செய்கை சகோதரருக்குள்ளாக பிரிவினைகளை ஏற்படுத்துவது இருளின் ஐக்கியத்தின் வெளிப்பாடு 1 யோவா 2:9,10. இன்றைக்கு அநேக வாலிபருடைய ஐக்கியம் மதுபானத் தோடும், மதுபான வெறியரோடுமிருக்கிறது ஏசா 5:11. அதனால் வழி தப்பி, நெறிமாறி நடந்து தேவனுடைய கோபத்தை சம்பாதிக்கின்றனர். மதுபானத்தையும், திராட்ச ரசத்தையும் ஆசையாய் தேடுகிற வாலிபர்களே கவனியுங்கள். பாத்திரத்திலே (பாட்டில்) பளபளப்பாய் தோன்றுகிறதை நோக்குகிறாயே அதினால் வரும் பலனை அறியாயோ, அதினால் வருவதெல்லாம் வேதனை, துக்கம், சண்டை, புலம்பல் காயங்கள் இரத்தங் கலங்கின கண்கள் இருளின் ஐக்கியத்தின் விளைவைக் கண்டாயா. இதுமட்டுமா..... சபிக்கப்பட்ட ஜனங்களோடு இணைக்கப்படுவாயே பிசாசிற்கும் அவனுடைய தூதர்களுக்கும் வரும் பலனை நீயும் பற்றிக் கொள்ள வேண்டியதாகுமே என்பதை யோசித்துப்பார்......

நீதி 23:35-39 இப்படி வேதனையுண்டாக்கும் வழிகளிலே காரியங்களிலே தங்களை இணைத்துக் கொண்டு ஐக்கியமாகி வாழ்கிறவர்கள் அனைவரும் இருளுக்குள் இருக்கிறார்கள். வாலிபர்களே, மனந்திரும்புங்கள். தூங்குகிறவர்களைப் போல் இராமல், வெறியர் களாயிராமல், விசுவாசமுள்ளவர்களாயும், தெளிந்த புத்தி, அன்பும் உள்ளவர்களாயும் கிறிஸ்துவின் மெய்யான ஒளியை தேடி அதில் ஐக்கியமாவோம்.

அன்பு சகோதரனே, இருளிலே நீ மறைந்திருக்கலாம் ஆனால், கிரியைகள் தேவனுக்கு முன்பாக வெளியரங்கமாய் தெரிகிறது. ஒவ்வொரு கிரியையையும் அந்தரங்கமான ஒவ்வொரு பாவத்தையும் தேவன் நியாயத்திலே கொண்டு வருவார். இதுவெல்லாம் ஆண்டவருக்கு தெரியப்

போகிறதா! என்று தப்பு கணக்குப் போட்டுக்கொண்டு உன் பாவங்களில் தொடராதே பிர 12:13,14-ல் அவனவனுடைய கிரியைக்குத்தக்க பலன் என்னோடே கூட வருகிறது என்ற ஆண்டவர் சொன்னார். அப்படியே செய்வார் வெளி 22:12. உன் இருளின் கிரியைகள் உன்னை பின்தொடர்ந்து நீ அமுக்கப்பட்டு விடாதே. ஆகவே, இப்பொழுதே ஒளியை அறிந்து கொள்ள உன் இருதயத்தை பிரயோகம் செய். இப்பொழுதே மனந்திரும்பு, இயேசுவை அறிக்கை செய். இருளின் ஐக்கியத்தினின்று உன்னை விடுவித்துக்கொள். அப்பொழுது அழுகையும் பற்கடிப்பும் நிறைந்த புறம்பான இருளிலிருந்து நீ தப்புவிக்கப்படுவாய்.

**II ஒளியின் ஐக்கியம் :-**

ஒளி (வெளிச்சம்) என்றாலே மனுஷனில் வருகிற முதல் உணர்வு சந்தோஷம் (மகிழ்ச்சி) மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது. இருளிலே இருந்த ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டு மகிழ்ந்தனர் மத். 4:15 - ஒளியானது இருளை அப்புறப்படுத்தி அங்கே வெளிச்சத்தை நிரப்புகிறபடியால் அவன் வெளிச்சத்தால் மனுஷன் நிரப்பப்படுகிறபடியால் அவன் சந்தோஷப்படுகிறான். கிறிஸ்தவர்களாகிய நமக்கு மெய்யான ஒளி வந்திருந்தும் நம்முடைய கிரியைகள் பொல்லாததாய் காணப்பட்டால் ஒளியை பகைக்கிறவர்களாய் காணப்படுவோம். இருளை அதிகமாய் நேசிக்கிறவர்களாயிருப்போம். அன்பான வாலிப சகோதரர்களே, சகோதரிகளே உனக்குள் ஒளியிருக்கிறதா? நீ ஒளியின் ஐக்கியத்தில் இருக்கிறாயா? அப்படியானால் உன் கிரியைகள் வெளியரங்கமானதாயும் நீதி நிறைந்ததாயும் காணப்படும் யோவா 3:19-21. அந்தரங்கத்திலே கிரியைகளை நடப்பிப்பாயானால் நீ அந்தகாரத்திலே நடக்கிறவனா யிருப்பாய். இயேசு ஆண்டவர் சொன்னார் நான் உலகத்திற்கு ஒளியா யிருக்கிறேன் என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான் யோவ 8:12 என்றும் இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின் தொடர்ந்தால் தான் கிறிஸ்துவின் ஐக்கியத்திற்குள் (ஒளியின் ஐக்கியத்தில்) இருக்கிறோம் என்று பொருள். இயேசு உலகின் ஒளியாயிருக்கிறார் என்றால் அந்த ஒளி கற்பிக்கின்ற வழியில் நடக்க வேண்டும். அந்தகாரக் கிரியைகளை நமக்கு இயேசு கற்றுக்கொடுக்கவில்லை. அவைகள் பிசாசினுடையது ஒளியாகிய இயேசுவிடமுள்ளது "சத்தியம்" மட்டுமே. ஆகவே சத்தியத்தை கேட்டு அவைகளின்படியே செய்வோ மானால் அவைகளால் பிழைப்போம். அந்த மெய்யான நீதி, பரிசுத்தம், தேவசாயல் எபே 4:18-24 - அப்போஸ்தலனாகிய யோவான் சொல்லுகிறார் எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும், அவருடைய குமாரனாகிய இயேசு

கிறிஸ்துவோடும் இருக்கிறது என்று அதுதான் நிறைவான சந்தோஷம் என்றும் சொல்லி நமக்கும் அறிவுறுத்துகிறார். தேவன் ஒளியாயிருக்கிறார் அவரில் எவ்வளவேனும் இருளில்லை. அப்படியானால் அன்பு சகோதரர்களே அவருடைய பிள்ளைகளாயிருக்கின்ற நாம் ஒளிக்குள் ஐக்கியப்பட்டவர்கள் என்றே பொருள். ஒளியிலே இருக்கிறோம் என்றால் சத்தியத்தின்படி நடக்க வேண்டும் சத்தியத்தின்படி செய்யும்போது ஒளியை நாம் பிரதிபலிக்கிறோம். ஒளியிலே நடந்தால் தான் ஒளியிலே ஐக்கியப் பட்டிருக்கிறோம் என்று பொருள். ஒளியின் கிரியைகளை நடப்பிக்க வேண்டு மானால் தொடர்ந்து ஒளிக்குள் நிலைத்திருக்க வேண்டும். ஒளியின் பிள்ளை களாகிய நாம் உலகத்தோடு ஐக்கியப்படாமல் அந்நிய நுகத்தில் பிணைக்கப் படாமல் பேலியாளின் கிரியைகளைச் செய்யாமல் ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.

ஒளியின் ஐக்கியத்தினால் நம்மில் உருவாகும் கனிகள் ஆவியின் கனிகள் ஒன்பதும் விளையும். சகல நற்குணத்திலும் ஆவியின் கனி வெளிப்படும். இவைகள் அனைத்தும் ஒளியின் ஐக்கியத்தினால் வரும் தேவ மகிமைக்கேற்ற கனிகளே. அதே போல ஒளியின் ஐக்கியத்தில் வாழ்கின்ற நமக்கு தேவனிடத்திலிருந்து வரும் பலன்களும் உண்டு. ஆம், பிரியமான வர்களே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் நமக்குண்டு; ஆகவே ஒளியின் ஐக்கியத்தின் மக்களாகிய நாம் அனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே. மேலும் வாடாத ஜீவக்கிரீடத்தைப் பெற்றுக் கொண்டு என்றென்றைக்கும் பரலோகத்தில் வீற்றிருக்கப் போகிறோம். ஆகவே ஜீவனையும் அழியாமை யையும் சுதந்தரிக்கப் போகிறவர்களாகிய நாம் அனைவரும் பொல்லாங்காய் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகி. நன்மை செய்து கிறிஸ்துவுக்குள் எப்போதும் சந்தோஷமாயிருந்து இடைவிடாமல் ஜெபித்து தேவனை நம்பிக் கொண்டிருப்போமானால் கிறிஸ்து இயேசுவுக்குள் கனி கொடுத்து வாழ்வோமானல் அவருக்கு சீஷராயிருப்போம். அப்பொழுது நாம் வேண்டிக்கொள்வது எதுவோ அது நமக்குக் கிடைக்கும் என்கிறார். பிரியமான சகோதரனே எல்லாவற்றுக்கும் முடிவு சமீபமாயிற்று இயேசுவின் வருகையின் காலமும் நெருங்கிற்று. ஆகவே, நாம் விசுவாசத்தில் உறுதியாயிருந்து கிறிஸ்துவின் ஒளிக்குள் வாழ்வோம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

***K. சேகர்,*** திருப்பூர்.

சிறுவர் பகுதி

# பிரம்மிக்கத்தக்க அதிசயமாய்...

எனதருமை சிறுதம்பி தங்கைகளே உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த மாதமும் இச்சிறுவர் பகுதி மூலமாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த மாதம் நாம் நம்முடைய சரீரத்தின் சிறப்பம்சம் ஒன்றை பற்றி படிக்கவிருக்கிறோம். அது என்னவென்று பார்ப்போமா? தொடர்ந்து படியுங்கள்.

எப்படி நம் நாட்டிற்கு நாட்டை காக்கும் தரைப்படை, விமானப்படை, கடற்படை என்று காக்கும் படைகள் இருக்கிறதோ, அதே போல் நம்முடைய உடலில் சரீரத்தை காக்கும் ஒரு செய்வினை (அ) செயல்பாடு உள்ளது. நாட்டை காக்கும் படைகள் நாட்டிற்கு ஆபத்தோ, அல்லது போரோ வரும்போது உடனே வந்து காக்கின்றனவோ, அதேபோல் நம் சரீரத்தை பெலவீனமாக்கும் சில கிருமிகளிடமிருந்து காப்பாற்றும் வகையில் அந்த செயல்பாடு இருக்கிறது.

நம்மை சுற்றி கிருமிகளும், சிலவகை பாக்டீரியாக்களும் இருக்கின்றன. நாம் சுவாசிக்கும் காற்றில் நாம் உண்ணும் உணவுகளில், பருகும் நீரில் இப்படி எல்லாவற்றிலும் அவைகள் இருக்கின்றன. ஆனால், நீங்கள் எப்போதாவது "இவ்வளவு இருந்தும் உடல் பெலவீனமாக வில்லை" என்று யோசித்திருக்கிறீர்களா? அது ஏன் தெரியுமா? அது அந்த உடம்பை காக்கும் அற்புத மான செயல்பாட்டினால் தான்.

நம்முடைய சரீரத்தில் முதல் நிலையாக நம்மை காப்பது நம்முடைய தோல் தான். அது எந்த கிருமிகளையும் தடுத்து சரீரத்திற்குள் போகவிடாமல் காக்கின்றது. அதில் ஏதாவது காயம் பட்டாலொழிய அதின் வழியாக கிருமிகள் உள்ளே செல்லாது. எனவே காயம் ஏதும் பட்டால் அதை கவனிக்க தவறிவிடக்கூடாது.

அடுத்ததாக, நம் சரீரத்தில் இருக்கும் மியூக்கஸ் (Mucousk Layer) என்ற பிசுபிசுப்பான இடங்கள் இதில் நம்மை அறியாமல் சரீரத்திற்குள் செல்லும் கிருமிகள் ஒட்டிக் கொள்கின்றன.

ஆனால், இவ்விரண்டிலும் சிறந்ததும் காக்கும் செயல்பாடு உடையதும் எதுவென்றால் இரத்த வெள்ளை அணுக்கள் Whit Blood Cells (WBC) என்று அழைக்கப் படும் **லிம்போஸைட்ஸ்** ஆகும். (Lymphocrytes) இவை கிருமிகளை கண்டுபிடித்து,

அதை செயலிழக்க வைக்கும் சில Antibodyகளைக் கொண்டு அவைகளை அழித்து விடும். பாருங்கள் நம்முடைய சரீரம் தேவனால் எப்படி அற்புதமாய் அமைக்கப்பட்டிருக்கிறதென்று!

சில நேரத்தில் நாம் பெலவீனமாய்ப் போனாலும் தேவன் நம் ஒவ்வொருவருக்குள்ளும் கொடுத்திருக்கிற இந்த செயல்பாடு இருப்ப தால் தான் பெலவீனம் இல்லாமல் இருக்கிறோம். நம் சரீரம் விசேஷமான தேவனுடைய படைப்பு தானே? ஆம் நிச்சயமாகத்தான். அதை தாவீது சங். 139:14ல் "நான் பிரம்மிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டிருக் கிறேன்" என்று கூறுகிறார். உண்மை தான்! தாவீது ராஜா கூறியது போல தேவன் நமக்கு கொடுத்திருக்கிற சரீரத்திற்காக நாம் நன்றி உள்ளவர்களாய் இருக்கவேண்டும். இருப்போமா?

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பார்.

மனப்பாட வசனம் : சங். 139:14.

R. Abel Rodger Nayagam

## நேபோ மலை

நேபோ மலை யோர்தான் நதிக்குக் கிழக்கே மோவாப் தேசத்தின் வட எல்லையில் சவக்கடலின் வடமூலையிலிருந்து ஏறக்குறைய 10 மைல் தூரத்தில் உள்ள ஒரு மலை நாடு. இந்த மலைநாடு யோர்தான் நதியின் கரைக்கு மேலே ஏறக்குறைய 4000 அடி உயரம் இருக்கும். அதின்மேல் நிற்கிற ஒருவன் எழுபது மைல் தூரத்திலுள்ள தாபோர் மலையையும், மேற்கிலுள்ள யூதா தேசத்து மலை நாட்டையும் நன்றாய்ப் பார்க்க முடியும். இந்த மலை மேலே மோசே நின்று பரிசுத்த பூமியைப் பார்த்த பிறகு இதில் மரித்தான். இதின் மறுபெயர் "பிஸ்கா" உபாகமம் 32:49; 34:1

# விசுவாசத்தின் அடிப்படைகள்

தேவன் நமக்கு ஆரோக்கியமான வார்த்தைகளின் மாதிரியைத் தந்திருக்கிறார் என்று நாம் கற்றுக்கொண்டோம். அது இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாடாகும் (2தீமோத்தேயு 1:13) அந்த மாதிரியைக் கொண்டு நாம் இயேசுகிறிஸ்துவின் ஒன்றான மெய் சபையை அடையாளங்கண்டு அந்த சபைக்கும் மனிதர்களால் ஸ்தாபிக்கப்பட்ட சபைக்கும் உள்ள வித்தியாசத்தை மற்றவர்களிடம் சொல்ல வேண்டும்.

புதிய ஏற்பாட்டை நாம் படித்ததினால் அந்த ஒன்றான மெய் சபையின் அஸ்திபாரமும், ஸ்தாபகரும் இயேசு கிறிஸ்து என்று நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இயேசுவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லுகிற ஒவ்வொரு சபையும் மனிதர்களால் ஸ்தாபிக்கப்பட்டதுதான். எனவே, அவைகள் எல்லாம் கிறிஸ்துவின் ஒன்றான மெய் சபை அல்ல தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதுமில்லை.

அந்த ஒன்றான மெய்சபையை அடையாளம் கண்டு கொள்வதற்கு தேவனுடைய மாதிரியின் இரண்டாம் பகுதியை நாம் பார்ப்போம்.

B. அதன் காலமும், ஸ்தாபித்த இடமும் - பெந்தெகொஸ்தே, கி.பி. 30 எருசலேம்.

நாம் மூன்றாம் பாடத்தில் படித்தபடி இயேசு கிறிஸ்துவின் ஒன்றான மெய்சபை பெந்தெகொஸ்தே நாளில் கி.பி. 30ல் எருசலேம் பட்டணத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. மத்தேயு (16:18,19; மாற்கு 9:1; அப். 1:8 : 2:1 1-4, 47)

இப்போது தேவனுடைய மாதிரியின் அந்த பகுதியை இன்றைய நாட்களில் மத உலகில் நாம் காணும் சபையோடு வித்தியாசப்படுத்த வேண்டும். நாம் அப்படி செய்யும்போது கீழே கொடுக்கப்பட்டுள்ள பிரபல மான மார்க்க பிரிவினை சபைகள் எல்லாம் ஒரு குறிப்பிட்டக் காலக் கட்டங்களில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தொடங்கப்பட்டது என்பது நமக்கு புலப்படும். கத்தோலிக்க சபை கி.பி. (606 - ரோம்); லுத்தரன் (கி.பி. 1560 ஜெர்மனி); எபிஸ்கொப்பாலியன் (1534 - இங்கிலாந்து); பிரஸ் பெட்டேரியன் கி.பி. (1536 - சுவிட்சர்லாந்து); பேப்டிஸ்ட் (கி.பி. 1607 - இங்கிலாந்து); மெத்தடிஸ்ட் (1739 - இங்கிலாந்து); யொகவா சாட்சிகள் (1872 - அமெரிக்கா); மார்மன்ஸ் (1830 - அமெரிக்கா); பெந்தெகொஸ்தே சபைகள் (1800 மற்றும் 1900 களில் - அமெரிக்கா); தென்னிந்திய திருச்சபை (1947 - இந்தியா); வடஇந்திய திருச்சபை (1970 இந்தியா) நீங்கள் தெளிவாகப் பார்க்கிறபடியாக இந்த மார்க்கப் பிரிவினை சபைகள் தவறான இடத்தில், தவறான காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டன. எனவே, இந்த மார்க்கப் பிரிவினைக் கூட்டங்கள் ஒன்றான மெய் சபைக்கு தேவனுடைய மாதிரிக்கு ஒத்துப்போகாததினால் இவைகள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை அங்கீகரிக்கப்படுவதில்லை.

அந்த ஒன்றான மெய்சபையை அடையாளம் கண்டு கொள்வதற்கு தேவனுடைய மாதிரியின் மூன்றாம் பகுதியை நாம் பார்ப்போம்.

**C.** அதன் பெயர் - இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறது.

இன்றைய நாட்களில் சிலர் சபையின் பெயர் முக்கியம்மானதல்ல என்று சொல்கிறார்கள். ஆதியாகமம் 17:4,5 வசனங்களை நாம் வாசிக்கும் போது பிரியமானவர்களே தேவன் ஆபிராமின் பெயரை ஆபிரகாம் என்று மாற்றினார். ஆபிரகாம் என்றால் திரளானவர்களின் தகப்பன் என்று அர்த்தம். இந்த வசனங்களில் நாம் பார்க்கிறபடி தேவன் ஆபிரகாமுக்கு அந்தப் பெயரை வைத்ததின் நோக்கம் என்னவென்றால் தேவன் அவரை திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாக மாற்றினபடியால் அந்தப் பெயரைச் சூட்டினார். எனவே தேவனைப் பொறுத்தவரை பெயர் மிகவும் முக்கியமானது.

மற்றுமொரு உதாரணத்தையும் நாம் பார்ப்போம். ஆதியாகமம் 32:28யை நாம் வாசிக்கும்போது தேவன் யாக்கோபின் பெயரை இஸ்ரவேல் என்று மாற்றினார். திரும்பவும் பெயர் முக்கியமானதல்ல வென்றால் தேவன் யாக்கோபின் பெயரை ஏன் மாற்றினார்? யாக்கோபு என்றால் தேவனுடன் வல்லமை கொள்வது என்று பொருள். யாக்கோபு தேவனோடும், மனிதரோடும், போராடி மேற்கொண்டபடியால் தேவன் யாக்கோபின் பெயரை இஸ்ரவேல் என்று மாற்றினார்.

தேவனுடைய வசனத்திலிருந்து நாம் பார்த்த இரண்டு உதாரணங்கள் பெயர்கள் தேவனுக்கு முக்கியமானவைகள் என்று நமக்குக் காட்டுகிறது. எனவே சபையின் பெயர் நமக்கும் முக்கியமானதாக இருக்க வேண்டும்.

அப்போஸ்தலர் 4:12ல் அப்போஸ்தலனாகிய பேதுரு இயேசு கிறிஸ்துவாலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படுபடிக்கு அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்று அறிக்கை செய்தார்.

ஆம், பெயர்கள் தேவனுக்கு மிக முக்கியமானவைகள் இந்த உண்மையை மனதில் கொண்டு ஒரு நியாயமான கேள்வியைக் கேட்கலாம்?

<u>**எந்த சபையின் பெயர்களை நாம் புதிய ஏற்பாட்டில் காண முடியும்:-**</u>

ரோமர் 16:16ல் நாம் வாசிக்கும்போது ஒன்றான மெய் சபையோடு யார் பெயர் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளது? நிச்சயமாக இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு யாருமில்லை! இயேசு அந்த சபையை ஸ்தாபித்ததினாலும், தம்முடைய சுய ரத்தத்தினாலே சம்பாதித்ததினாலும் இதுமிகவும் சரியானதே! மத்தேயு 16:18, அப். 20:28.

1 கொரி 1:2யை நாம் வாசிக்கும்போது ஒன்றான மெய்சபையோடு யாருடைய பெயர் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளது? நிச்சயமாக தேவனைத் தவிர வேறு யாருமில்லை! இந்த இரண்டு வசனங்களிலிருந்து ஒன்றான மெய்சபை என்றே அழைப்பது தேவனுக்குப் பிரியமாயிருக்கும் என்று நாம் நிச்சயமாக அறிந்து கொள்ள முடியும். சபைக்கு புதிய ஏற்பாட்டில்

காணப்படுகின்ற எந்தப் பெயரும் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதே. இப்படிப்பட்டப் பெயர்கள் கிறிஸ்துவையும், பிதாவையும் கனப் படுத்துகிறது மனுஷரையல்ல. இவைகள் ஒற்றுமையை விருத்தியடையச் செய்யும், பிரிவினையை அல்ல.

மறுபடியும் தேவனுடைய மாதிரியின் இந்த பகுதியை இன்றைய நாட்களில் மதஉலகில் நாம் காணும் சபைகளோடு வித்தியாசப்படுத்த வேண்டும். மார்க்கப் பிரிவினை சபைகள் மனிதர்களின் பெயர்களையும், மனிதர்களால் கொடுக்கப்பட்டப் பெயர்களையும் கொண்டிருக்கின்றன என்பது உண்மை. அவைகள் இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டில் காணப் படுகின்றப் பெயர்கள் அல்ல. எனவே இந்தப் பெயர்கள் மனிதர்களிடமிருந்து வந்தவைகளே, பரலோகத்திலிருந்து அல்ல! நாம் பார்த்தபடி இது தேவனுக்குப் பிரியமானத்தல்ல! மேலும் இது பிரிவினை அபிவிருத்தியடைய வழிவகுக்கிறது ஒற்றுமையை அல்ல!

நாங்கள் மிகுந்த தாழ்மையுடனும், அன்புடனும் சபையுடன் தொடர்புடையதாக கீழ்காணும் பெயர்கள் புதிய ஏற்பாட்டில் இயேசுவின் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளன என்பதற்காக ஒரு வசனத்தைக் காட்டும்படி கேட்டுக்கொள்கிறோம். கத்தோலிக்க சபை, லுத்தரன், எபிஸ்கோப்பாலியன், பிரஸ் பிட்டேரியன், பாப்டிஸ்டு, மெதடிஸ்ட், யெகோவா சாட்சிகள், மார்மன், பெந்தெகொஸ்தே, தென்னிந்திய திருச்சபை, வடஇந்திய திருச்சபை.

பிரியமானவர்களே கர்த்தருடைய சபைக்கு இப்படிப்பட்ட பெயர்களை கர்த்தருடைய இரண்டாம் வருகை வரை நீங்கள் தேடினாலும் கண்டுபிடிக்கமாட்டீர்கள், புதிய ஏற்பாட்டில் காணப்படாத எந்த சபையும் ஒன்றான மெய் சபைக்கான தேவனுடைய மாதிரிக்குப் பொருந்தாததாக இருக்கும்.

அந்த ஒன்றான மெய் சபையை அடையாளம் கண்டு கொள்வதற்கு தேவனுடைய மாதிரியின் நான்காம் பகுதியை நாம் பார்ப்போம்.

அதன் ஆராதனை - இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டால் ஆளுகை செய்யப்படுகிறது.

யோவான் 4:23,24 வசனங்களை நாம் வாசிக்கும்போது "தேவன் தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள்ஆவியோடும், உண்மையோடும் தம்மைத் தொழுது கொள்ள வேண்டும்" என்று விரும்புகிறார் என இயேசு மிகத் தெளிவாக சொன்னார். இங்கே ஆவியோடும் என்பது ஒருவர் சரியான மனதுடனும், சரியான மனநிலையுடனும் தேவனைத் தொழுது கொள்ள வேண்டும் எனப் பொருள்படும்.

சரி தேவனை உண்மையோடுத் தொழுது கொள்ள வேண்டும் என்று இயேசு சொன்னதன் பொருள் என்ன? அதை இயேசு அடுத்த வசனத்திலேயே தெளிவுப்படுத்தினார். யோவான் 17:17 யை நாம் வாசிக்கும் போது இயேசு இதை உலகத்தில் இருந்தபோது பிதாவை நோக்கி ஜெபம் செய்தார். பிதா

தமது சத்தியத்தினாலே ஜனங்களைப் பரிசுத்தப் படுத்த வேண்டும் என இயேசு ஜெபித்தார். அதன்பின் நம்முடைய எஜமான் அந்த சத்தியம் என்னவென்று குறிப்பிட்டு சொன்னார். எதை இயேசு சத்தியமாக அடையாளம் காட்டினார்? தேவனுடைய வசனத்தை.

எனவே நீங்களும், நானும் தேவனை சரியான மனது அல்லது மனநிலையுடன் ஆராதிக்க வேண்டும். அவருடைய வசனத்திற்கேற்ப நாம் அவரை ஆராதிக்க வேண்டும். கொலோ 3:17யை நாம் வாசிக்கும்போது பிரியமானவர்களே இது ஒரு முக்கியமான வசனம் தேவன் உங்களுக்கும் எனக்கும் இங்கே என்ன சொல்கிறார் என்பதைக் கவனமாக கவனியுங்கள். தேவன் இங்கே கட்டளையிடுவது நம்முடைய வாழ்க்கையில் ஒவ்வொரு பகுதியிலும் பொருந்துவதாக உள்ளதைக் கவனியுங்கள். நாம் அதை எப்படி அறிவோம்? தேவனால் ஏவப்பட்டு பவுல் உபயோகித்த வார்த்தைகளினால் நாம் அதை அறிய முடியும்.

முதலாவது, தேவன் நாம் செய்கிறயாவும் இதில் பொருந்தும். இரண்டாவது நாம் வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது நாம் செய்கிற யாவும் இதில் பொருந்தக் கூடியதாகயிருக்கிறது என்று தேவன் சொல்கிறார். மூன்றாவது நாம் செய்கிற யாவும் இதில் பொருந்தும்.

எனவே நாம் சொல்கின்ற யாவுக்கும் செய்கின்ற யாவுக்கும் தேவனுடைய கட்டளை என்ன? எல்லாவற்றையும் நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் செய்யவேண்டும்! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எல்லாவற்றையும் செய்வது என்பதன் பொருள் என்ன?

யோவான் 5:43ல் நாம் வாசிக்கும்போது இயேசு பிதாவின் நாமத்தினாலே வந்தார் அதாவது, பிதாவின் அதிகாரத்தில் வந்தார். ஆயினும் அந்த தெய்வீக அதிகாரத்தை ஏற்க அநேகர் மறுத்தனர்.

எனவே எல்லாவற்றையும் இயேசுவின் நாமத்தினாலே செய்ய வேண்டும் என்பது அவருடைய அதிகாரத்தினாலே எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்பதாகும். நாம் ஏற்கனவே பார்த்தபடி கிறிஸ்துவின் அதிகாரம் அவருடைய புதிய ஏற்பாட்டில் இருக்கிறது. எனவே நாம் செய்கின்ற யாவையும் தேவனை ஆராதிப்பது உட்பட கிறிஸ்து தன்னுடைய புதிய ஏற்பாட்டில் சொல்லியிருக்கிற அதிகாரத்தினாலே நாம் செய்ய வேண்டும்.

கர்த்தருக்கு சித்தமானால் அடுத்த மாதம் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் தேவனை ஆராதிப்பதற்கு நாம் கூடும்போது நாம் என்ன செய்ய இயேசு நமக்கு அதிகாரம் கொடுக்கிறார் என்று பார்ப்போம். பிரியமான வர்களே கிறிஸ்து புதிய ஏற்பாட்டில் கொடுத்துள்ள அதிகாரத்திற்கும் மார்க்க பிரிவினை கூட்டத்தார் ஆராதனையில் செய்வதற்கு பெரிய வித்தியாசம் இருக்கிறது. இது அவர்கள் செய்யும் ஆராதனையை வீணானதாக மாற்றுகிறது! இது உண்மையாகவே ஒரு துக்கமான விஷயம் தான் ஆனால், சபைக்கு தலையாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின்படி இது உண்மையாகும்.

**BENNY** **CHARLIE DIPALMA**

# தங்கள் வயிற்றுக்கே ஊழியம் செய்கிறார்கள்...

இந்த பூமியில் வாழக்கூடிய ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய பாவத்தைக் குறித்தும் அவனுடைய மீட்பை குறித்தும் அவனுக்கு கிடைக்க போகும் நித்திய ஜீவனைக் குறித்தும் தெள்ளத் தெளிவாக எடுத்து கூறுவது நம்முடைய வேதாகமம் மாத்திரமே இப்படி சிறப்பு பெற்று இருக்கிற நம்முடைய கிறிஸ்தவம் இன்றைய நாட்களில் தங்கள் வயிற்றுக்கே ஊழியம் செய்து வருகிற அநேக பிரிவினை சபைகளின் கள்ளபோதகர்களின் கையில் சிக்கி வருமானத்திற்காக அதை படாதபாடு படுத்தி கொண்டு இருக்கிறார்கள். கிறிஸ்தவம் இன்று உயிருக்கு போராடிக் கொண்டு இருக்கிற ஒரு நோயாளியைப் போல் இருக்கிறது.

இன்றைய மத உலகில் கிறிஸ்தவம் என்றாலே மக்களுடைய மனதில் “அற்புதம்” பிரதான இடத்தை பிடித்து இருக்கிறது. ஏனென்றால் வாரத்தில் ஏழு நாளும் அற்புத சுகமளிக்கும் கூட்டம் என்று வைத்து பிசாசின் கட்டு, பில்லி சூன்யம் எடுக்கப்படும், தீராத நோயிலிருந்து விடுதலை தருவோம் என்று வாக்குறுதிகளை அள்ளி வீசுகிறார்கள் போதாத குறைக்கு தொலைக்காட்சியில் தினந்தோறும் எங்கு திருப்பினாலும் “அற்புதம் தான்” பிரதான தொழிலாக இருக்கிறது. எனவே இந்த கட்டுரையின் மூலம் “அற்புதம்” என்பது என்னவென்றும் அதை இன்றைக்கும் செய்ய முடியுமா என்பதை வேத வாக்கியங்களின் துணை கொண்டு ஆராய்ந்து பார்த்து கற்றுக் கொள்வோம் ஏனென்றால் நம்முடைய வேதாகமம் “எல்லாவற்றையும் சோதித்து பார்த்து நலமானதைப் பிடித்து கொள்ளுங்கள்” (1தெச. 5:21) என்று அறிவுறுத்துகிறது.

## அற்புதம் என்றால் என்ன?

அற்புதம் என்பது இயற்கைக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். அதாவது எந்த மனிதனும் அந்த காரியத்தை செய்ய முடியாததாக இருக்க வேண்டும். தேவன் தம்முடைய வல்லமையை தாம் தெரிந்து கொண்ட மனிதர்களை கொண்டு இயற்கையின் சட்டத்திற்கு புறம்பாக செய்வதுதான் அற்புதமாகும்.

உதாரணமாக தண்ணீர் இரத்தமாக மாறியது (யாத் 7:17,18) தண்ணீர் திராட்ச ரசமாக மாறியது (யோவா 2:1-10) இதை எந்த மருத்துவ உலகமும், விஞ்ஞான உலகமும் இன்றைக்கும் என்றைக்கும் செய்ய முடியாது. ஆனால்,

தேவன் தம்முடைய தாசர்களை கொண்டு (மோசே, இயேசு கிறிஸ்து) எல்லார் கண்களுக்கு முன்பதாக செய்திருக்கிறார். இந்த அற்புதங்களை இன்றைக்கு பொய்யான அற்புதங்களை செய்யக் கூடிய கள்ள போதகர்களால் நிச்சயமாக செய்ய முடியாது.

இன்றைக்கு அற்புதம் என்று எதை சொல்கிறார்கள் தலைவலி, கைவலி சுகமானது, ஜலதோசம், காய்ச்சல் சரியானது, கட்டி கரைந்தது, இடுப்பு வலி சரியானது காது கொஞ்சம் கேட்காமல் இருந்தது இப்போது கொஞ்சம் பரவாயில்லை என்ற ரீதியில் சொல்கிறார்கள். இதை சாதாரண மருத்துவரே குணப்படுத்த முடியுமே, மருத்துவரே இதை குணப்படுத்த முடியும் என்றால் மருத்துவரும் தேவனும் ஒன்றாகி விடுவார்களே இதை நாம் எப்படி அற்புதம் என்று சொல்ல முடியும். நீங்களே இந்த காரியங்களை யோசித்துப் பாருங்கள்.

## *வேதாகமம் சொல்லும் அற்புதங்கள்*

நம்முடைய பரிசுத்த வேதாகமத்தில் தேவன் செய்த அற்புதங்களின் சில பட்டியலை கவனமாக பாருங்கள் இன்றைக்கு இதே போல் யாராவது செய்கிறார்களா அல்லது செய்ய முடியுமா என்று தேடிப்பாருங்கள்.

## *அற்புதங்களின் பட்டியல் இதோ*

1) மோசேயின் கோல் சர்ப்பமானது (யாத். 4:3)
2) மோசேயின் கை வெண்குஷ்டம் பிடித்து பின்பு அந்த நொடியே சுகமானது (யாத். 4:6)
3) பத்து வாதைகள் (தண்ணீர் இரத்தமாக மாறினது உட்பட) (யாத். 7:17, 8:3, 8:16, 8:21, 9:3, 10,18,10:4, 22 11:10)
4) இஸ்ரவேல் ஜனங்களோடு பகலிலே மேக ஸ்தம்பமும் இரவிலே அக்கினி ஸதம்பமும் கூட சென்றது (யாத். 13:22)
5) செங்கடல் இரண்டாக பிளந்து இஸ்ரவேல் ஜனங்கள் வெட்டாந்தரை வழியாக நடந்து போனது (யாத். 14:21,22)
6) வானத்திலிருந்து மன்னாவை கொடுத்து இலட்சக்கணக்கான மக்களை அனுதினமும் போஷித்தது (சுமார் 40 வருடங்கள்)
7) நாற்பது வருஷங்கள் வனாந்தரத்தில் நடந்தும் அவர்கள் அணிந்திருந்த வஸ்திரம் பழையதாய் போகாமலும் கால் வீங்காமலும் இருந்தது (உபா 8:4)

8) யோர்தான் நதி இரண்டாக பிரிந்து இஸ்ரவேல் ஜனங்களுக்கு வழி விட்டது (யோசு. 3:13-16).

## கிறிஸ்து செய்த அற்புதங்கள்

1) தண்ணீர் திராட்ச ரசமாக மாறினது (யோவா 2:1-10)

2) இயேசு கிறிஸ்து குஷ்டரோகிகளையும் பிறவி குருடர்களையும், முடவர்களையும், மரித்தவர்களையும் சுகப்படுத்தியதும், உயிரோடு எழுப்பியதும் (மத். 9:1-7, 18-25, 9:32 - 35 மாற் 3:3-5, லூக். 7:1-10)

3) மரித்து அடக்கம் பண்ணப்பட்ட லாசருவை நான்கு நாட்களுக்கு பிறகு உயிரோடு எழுப்பியது (யோவா 11:11-46)

4) தண்ணீர் மீது இயேசு கிறிஸ்து நடந்ததும், காற்றையும், கடலையும் அதட்டி அமைதிப்படுத்தியது (மத். 14:24 - 26 மாற் 4:39)

5) ஏழு அப்பங்களையும் சில மீன்களையும் கொண்டு நாலாயிரம் பேரை போஷித்ததும், ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களை கொண்டு ஏறக்குறைய ஐயாயிரம் பேரை போஷித்தது (மத். 15:33-38 லூக். 9:12-17)

## கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் செய்த அற்புதங்கள்

1) பேதுருவும், யோவானும் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய் பிறந்த மனுஷனை சொஸ்தபடுத்தினார்கள். (அப். 3:2-10).

2) பேதுருவின் நிழல் பட்டு அநேகர் சுகமானார்கள் (அப். 5:14,16)

3) எருசலேமில் வாசம் பண்ணுகிற எல்லாருக்கும் தெரிந்திருக்கிறபடி அப்போஸ்தலர்கள் வெளியரங்கமான அற்புதங்களை செய்தார்கள் (அப். 4:16)

4) பவுலுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் வியாதிக்காரர் மேல் போட்டவுடன் வியாதிகள் குணமானது. (அப். 19:12)

5) மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்த மரித்தவனாக எடுக்கப்பட்ட ஐத்திகுவை பவுல் உயிரோடு எழுப்பியது (அப். 20:9)

6) மரித்து போன தொற்காளை பேதுரு உயிரோடு எழுப்பியது. (அப். 9:36-42)

7) விரியன் பாம்பு கடித்தும் ஒரு சேதமும் பவுலுக்கு வரவில்லை. (அப். 28:3-6)

நம்முடைய வேதாகமம் இப்படியாக அற்புதங்களை சொல்லிக் கொண்டே போகிறது. இந்த அற்புதங்களை இன்றைக்கு யாராவது செய்ய முடியுமா? சர்வ நிச்சயமாக யாரும் செய்ய முடியாது. மேலே சொல்லப்பட்ட காரியங்கள் தான் அற்புதம் என்று நம்முடைய வேதாகமம் கூறுகிறது.

***அற்புதங்கள் இரட்சிப்போடு தொடர்புடையது***

புதிய ஏற்பாட்டு பகுதியில் அற்புதங்கள் நடக்கும் போதெல்லாம் பெரும்பாலான இடங்களில் ஜனங்கள் தேவனிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறார்கள் வேத வசனங்களை பாருங்கள்.

1) கானாவூர் கலியாணத்தில் தண்ணீர் திராட்ச ரசமாக மாறினபோது அநேகர் இயேசுவினிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறார்கள் (யோவா 2:11,23)

2) மரித்த லாசருவை இயேசு கிறிஸ்து நான்கு நாட்களுக்கு பிறகு உயிரோடு எழுப்பினபோது அநேக யூதர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். (யோவா 11:45,12:10)

3) கிறிஸ்துவின் சபையானது வல்லமையோடு எருசலேமில் ஸ்தாபிக்கப் படும்போது சுமார் மூவாயிரம் பேர் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப். 2:41).

4) தாயின் வயிற்றில் சப்பாணியாய் பிறந்த மனிதனை பேதுருவும் யோவானும் சுகப்படுத்தினபோது வசனத்தை கேட்டு ஐயாயிரம் பேர் இரட்சிக்கப்பட்டார்கள் (அப். 5:14).

5) அனனியா, சப்பீராளின் மரணத்தின் போது அநேகருக்கு பய முண்டாகி, திரளான புருஷர்களும், ஸ்தீரிகளும் இரட்சிக்கப் பட்டார்கள் (அப். 5:14)

இப்படியாக வசனம் சொல்லிக்கொண்டே போகிறது. எனவே அற்புதங்கள் நடக்கும் போதெல்லாம் பெரும்பாலான இடங்களில் ஜனங்கள் இரட்சிக்கப்பட்டு இருக்கிறார்கள். நாம் பெற்றுக் கொண்ட இரட்சிப்பைக் குறித்து எபிரெய ஆசிரியர் முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும் தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும் தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற

இவ்வளவு பெரிதான இரட்சிப்பை குறித்து நாம் கவலையற்று இருப்போமானால் தண்டனைக்கு எப்படி தப்பித்துக் கொள்ளுவோம் (எபி. 2:3,4) என்று கேட்கிறார்.

மேலும் யோவான் அப்போஸ்தலன் என்ன கூறுகிறார் என்று பாருங்கள் இந்த புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாக செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும் விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டு இருக்கிறது (யோவா 20:30,31) என்கிறார்.

எனவே கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே இந்த வசனங்களை நாம் உற்று நோக்கும் போது ஓர் உண்மை புலப்படும். அது என்னவென்றால் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும் அவர் அளித்த இரட்சிப்பையும் மக்கள் ஏற்றுக் கொள்வதற்காகத்தான் அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்திருக்கிறார் என்று நாம் உணர்ந்து கொள்ள முடியும். இதை இவ்வசனம் உறுதிப்படுத்துகிறது. நம்முடைய இரட்சிப்புக்கு தேவையான வசனங்களும், ஆதாரங்களும் நம்மிடத்தில் உண்டு (வேதாகமம்) இவ்வேத வசனங்களை விட்டு விட்டு இன்னமும் நீங்கள் அடையாளங்களையும், அற்புதங்களையும் காண வேண்டும் என்று பரிசேயர், சதுசேயர் போல அவிசுவாசமாக கேட்டுக் கொண்டு இருக்காமல் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள வேத வாக்கியங்களை ஆராய்ந்து (யோவா 5:39) பாருங்கள்.

மேலும் அற்புதங்களை கண்டு மாத்திரம் ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளும் தேவனுக்குள்ளும் நிலைத்திருக்க முடியாது, தேவனுடைய பலத்த கரத்தினால் பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் கண்ணாரக் கண்ட இஸ்ரவேல் ஜனங்கள் பிற்பாடு அவிசுவாசமாய் போய் வனாந்தரத்தில் எல்லாரும் அழிக்கப்பட்டு கானான் தேசத்தை காணாதபடி மரித்து போனார்கள்.

புதிய ஏற்பாட்டு பகுதியில் இயேசுகிறிஸ்துவோடு கூட இருந்து பல அற்புதங்களையும் அடையாளங்களையும் கண்களால் கண்டு உணர்ந்த தோமா பிற்பாடு கிறிஸ்து உயிர்ந்தெழுந்த போது அவருடைய விலாவிலே கையை போட்டு பார்த்தால்தான் விசுவாசிப்பேன் (யோவா 20:25) என்று கூறியதையும் நாம் மறுக்க முடியாது.


# வேதாகம திருமுழுக்கு

திருமுழுக்கு பற்றிய உண்மையைக் கூறும் ஒரே புத்தகம் வேதாகமம். எனவே, இக்காரியத்தில் நாம் உண்மையை அறிந்து கொள்ள, அன்று தேவ ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்ட வசனத்திற்குச் செல்ல வேண்டும். தயவு செய்து கீழ்க்கண்ட உண்மைகளைக் கவனியுங்கள்;

1. ஒரே ஒரு திருமுழுக்கு மட்டுமே உள்ளது. (எபே. 4:5). கி.பி. 64 ஆம் ஆண்டில் இந்த உண்மை எழுதப்பட்டது; ஆனால், இந்தக் காலத்தில் ஒரே ஒரு திருமுழுக்கு மட்டுமே இருந்தது.
2. அது அடக்கம், (கொலோ. 2:12; ரோமர் 6:3,4). பாப்டிஸோ என்னும் கிரேக்க வார்த்தையிலிருந்து வந்த திருமுழுக்கு, எப்போதுமே ஒரு அடக்கம், அல்லது ஒரு முழுக்குதல் என்னும் பொருள்படுமே தவிர, தெளித்தல் அல்லது ஊற்றுதல் என்று ஒருபோதும் அதற்கு அர்த்தம் இல்லை.
3. அது தண்ணீரில் செய்யப்படும் ஒரு அடக்கம். (அப். 8:26-39).
4. அது கிறிஸ்துவின் நற்செய்தியின் ஒரு கட்டளை. (மாற்கு 16:15,16; அப். 10:48)
5. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் பெயராலே அது செய்யப்பட வேண்டும். (மத். 28:19,20)
6. அது இரட்சிக்கிறது. (1பேதுரு 3:21).
7. அது பாவமன்னிப்புக்கென்று ஏற்பட்டது. (அப். 2:38)
8. அது பாவங்களைக் கழுவுகிறது. (அப். 22:16).
9. அது ஒருவனை கிறிஸ்துவுக்குள் கொண்டு வருகிறது. (ரோமர் 6:3,4, கலா. 3:26,27)
10. அது ஒருவனை சபைக்குள் சேர்க்கிறது. (1கொரி. 12:23)

குறிப்பு : திருமுழுக்கு மட்டுமே ஒருவனை இரட்சிப்பதில்லை. கர்த்தரை விசுவாசிக்கப் போதுமான நம்பிக்கை ஒருவனுக்கு ஏற்பட்டு (எபி. 11:6), தனது பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு (அப். 17:30) கிறிஸ்துவை அறிக்கை செய்து (மத். 10:32), கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, திருமுழுக்குப் பெறும் போது தான் அது அவனை இரட்சிக்கிறது. (அப். 10:48; எபிரேயர் 5:8,9).


**எஸ்.எஸ். ராஜன்**



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

**TV PROGRAM**




Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered News Paper RNI No. 47661/87 - New Delhi
Postal Registration No. Erode / 26 / 2006 - 2008

திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம் நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.




| | | | |
|---|---|---|---|
| தமிழன் TV | சனி | காலை | 7:15 - 7:30 |
| தமிழன் TV | ஞாயிறு | இரவு | 9:45 - 10:00 |
| SS மியூசிக் TV | திங்கள் | காலை | 7:00 - 7:15 |


# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட

**ஓர் இலவச பயிற்சி.**

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.
தமிழ்நாடு. இந்தியா.


Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam. Ph : 04257 - 222555, 224555